24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 94 | மாசி 17ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | 01 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

வீரர்களின் போர் இன்று ஆரம்பம்!
பக்கம்-22

# தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளால் மட்டும்தான் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தினர்!

## மதம் சார்ந்து அவர்கள் தாக்குதல்களை நடத்தவில்லை என பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தெரிவிப்பு

இஸ்லாமபாத், மார்ச் 1
விரக்தி மற்றும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளால் ஏற்பட்ட கோபம் காரணமாகவே விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். அவர்கள் மதம் சார்ந்து தாக்குதல்களை நடத்தவில்லை என்று பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
'இஸ்லாமிய தீவிரவாதிகள் தான் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்வதாக இந்தியா தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றது. தீவிரவாதத்துக்கு மதம் கிடை >> 03

## இந்தியச் சிப்பாய் அபிநந்தன் இன்று விடுவிக்கப்பட வாய்ப்பு

இஸ்லாமபாத், மார்ச். 1
இந்தியச் சிப்பாய் அபிநந்தன் பாகிஸ்தானால் நாளை (இன்று) விடுவிக்கப்படுவார் என்று தெரிவித்தார் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான்கான்.
காஷ்மீர் பாகிஸ்தான் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் காலை அத்துமீறிய >> 21

# அதிகாரப்பகிர்வுதொடர்பில் ஆராய மற்றொரு புதிய குழு

யாழ்ப்பாணம், மார்ச் 1
புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி இடைநடுவில் நிற்கின்றது. புதிய அரசமைப்பில் முக்கிய விடயங்களான தேர்தல்முறைமை, நிறைவேற்று அதிகாரம் என்பன தொடர்பில் கட்சிகள் இடையே பொது இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. அதிகாரப் பகிர்வு தொடர்பில் கட்சிகள் இடையே இணக்கப்பாடு ஒருமித்த கருத்து நிலவுவதால், அதிகாரப் பகிர்வை அரசமைப்பினுள் எப்படி புகுத்துவது - அதனைச் செயற்படுத்துவது என்பது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. >> 04

## சர்வகட்சி கூட்டத்தில் பங்கேற்கோம்

*ஜே.வி.பி. தீர்மானம்*

யாழ்ப்பாணம், மார்ச் 1
அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வ கட்சிக் குழுக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) பங்கேற்கவில்லை. தமது கட்சி இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தீர்மானம் எடுத்துள்ளதாக அந்தக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார >> 21

## பௌத்தர்களின் விவரங்களை அவசரமாக திரட்டுகிறது அரசு

யாழ்ப்பாணம், மார்ச் 1
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பௌத்தர்களின் விவரங்களை திரட்டும் நடவடிக்கைகளில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஈடுபட்டுள்ளது. இது தொடர்பில் மாவட்டச் செயலர்களுக்கு சுற்றறிக்கை அமைச்சால் அனுப்பி >> 21

## அதிகாரப் பகிர்வுக்கு என்ன அவசரம் என்று சர்வகட்சிக் குழுக் கூட்டத்தை கூட்டினீர்கள்?

*சம்பந்தனைப் பார்த்துக் கேட்டார் மைத்திரி*

யாழ்ப்பாணம், மார்ச் 1
நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும் நிலையில், அதிகாரப் பகிர்வு, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு என்ன அவசரம் என்று சர்வகட்சிக் குழுக் கூட்டத்தைக் கூட்டச் சொன்னீர்கள். இவ்வாறு அரச >> 21

*எல்லை தாண்டினர் என*

## இலங்கை மீனவர்கள் இந்தியாவால் கைது



வடமராட்சி, மார்ச் 1
எல்லை தாண்டினார்கள் என்ற குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் இருவர் இந்தியக் கடற்படையால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். >> 21

## புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடரும்

*ரணில் திட்டவட்டம்*

யாழ்ப்பாணம், மார்ச் 1
புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் தொடரும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வகட்சிக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் >> 21

புதிய அரசமைப்பு உருவாக்கம்

## உக்கிப்போன முயற்சியை தோண்டுவதில்பயனில்லை

*மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 1
புதிய அரசமைப்பு உருவாக்கம், உக்கிப்போன முயற்சி. அதனை மீண்டும் தோண்டுவதில்எந்தப்பயனுமில்லை. இதன் காரணமாகவே சர்வ >> 21

## சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில் இருந்து நடுவில் வெளியேற முற்பட்ட பொலிஸார்

*மாவட்டச் செயலரின் கோரிக்கையை அடுத்து கூட்டத்தில் தொடர்ந்தும் பங்கேற்றனர்*

யாழ்ப்பாணம், மார்ச் 1
சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் பொலிசாருக்கு எதிராக அதிக குற்றச்சாட்டுக்கள் எழுந்த நிலையில், இந்தக் கூட்டம் எம்மை குறைகூற வேண்டும் என்றே இடம்பெறுவதனால் நாம் இதில் இருந்து வெளியேறுகின்றோம் எனத் தெரிவித்த பொலிஸார் கூட்டத்தில் இருந்து வெளியேற முற்பட்டனர். பின்னர் மாவட்டச் செயலரின் கோரிக்கையை அடுத்து கூட்டத்தில் தொடர்ந்தும் பங்கெடுத்தனர். >> 21

*ரவிராஜை கொல்வதற்கு*

## கருணாவுக்கு ரூ.5 கோடி வழங்கினாரா கோத்தபாய?

கொழும்பு, மார்ச் 1
யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜை கொலைசெய்ய, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கருணா தரப்பினருக்கு 5 கோடி ரூபாவை வழங்கினார் என்று புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொலிஸ் >> 21




ரூ. 2500/= அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து சேமிப்புகளுக்கும் இலங்கையின் அதிகூடிய வட்டி.
DFCC சேமிப்பு
நீங்களும் இன்றே DFCC வங்கிக் கிளைக்கு வந்து DFCC WINNER சேமிப்புக் கணக்கை ஆரம்பியுங்கள்.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி



# கிட்டிப்புள்

கிட்டிப் புள்ளு என்பது தமிழரின் பழமையான ஒரு விளையாட்டு ஆகும். கிட்டிப் புள்ளு சிறுவர்கள் ஆடும் ஒரு விளையாட்டு. கிட்டிப்புள், கிட்டிக்கோல் ஆகியவை இந்த விளையாட்டுக்குப் பயன்படும் கருவிகள். கிட்டிப்புள் சுமார் மூன்றுவிரல் பருமனில் 20 சென்ரிமீற்றர் நீளம் கொண்டது. கீந்துகுழி ஆட்டத்துக்கு அதன் இரு முனைகளும் கூராக இருக்கும். அடிகோல் ஆட்டத்துக்கு முனைக்கூர் இருக்காது

கிட்டிக்கோல் ஒருவிரல் அல்லது இருவிரல் பருமனும் சுமார் 50 சென்ரிமீற்றர் நீளமும் கொண்டது.

முதல் வகையான கிட்டிப்புள்ளு விளையாட்டு தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில், இலங்கையிலும் காணப்படுகின்றது. இதற்கு ஒரு முழம் நீளத்துக்கு தரையில் ஒரு ஆழமான குழிக்கோடு ஏற்ப்படுத்த வேண்டும். அந்த குழிக்கோட்டை கீந்து குழி என்று அழைப்பர்.

இந்த விளையாட்டில் இரண்டு அணிகள் உண்டு. ஒரு அணி, புள்ளை குழிக்கோட்டிலிருந்து தண்டிலால்அழுத்தி எதிர் அணியின்ர் இருக்கும் பக்கம் கீந்த வேண்டும். எதிர் அணியினர் கீந்தியபுள்ளைப் பிடிக்க வேண்டும். எதிர் அணியினர் புள்ளை தரையில் விழுமுன் தவ்விப் பிடித்துவிட்டால், கீந்தியவர் ஆட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். கீந்திய புள் தரையில் விழுந்த பின்னரே, எதிர் அணியினர் அந்த புள்ளை கையில் எடுத்தால், அப்புள்ளை திரும்ப கீந்தியவர் கிட்டி அல்லது தாண்டிலை நோக்கி வீசியெறிய வேண்டும். அவ்வாறு வீசுவதற்கு முன்பு கீந்தியவர் கீந்து குழியில் இருந்து பின்னோக்கி இரண்டு தண்டில் நீளம் அளவெடுத்து தரையில் வைக்க வேண்டும்.

எதிர் அணியினர் வீசிய புள் தாண்டிலின் மீது பட்டால் கீந்தியவர் ஆட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். அப்படி புள் தாண்டில் மீது படாவிட்டால், கீந்தியவர் தாண்டிலால்

கீந்து குழியில் இருந்து புள்ளை நோக்கி அளப்பார். எத்தனை தாண்டில் நீளம் தொலைவில், எதிர் அணியினர் வீசிய அந்த புள் இருக்கிறதோ அத்தனை புள்ளிகள் கீந்தியவர் அணியைச்சேரும்.

பின் மறுபடியும் அதே ஆட்டக்காரர் கீந்த வேண்டும். இப்படி ஒரு அணியில் உள்ள அனைத்து ஆட்டக்காரர்களும் ஆட்டத்தை விட்டு வெளியேரும் வரை கீந்துவர்.

அனைவரும் வெளியேறிய நிலையில் அந்த அணி எத்தனை புள்ளிகள் எடுத்துள்ளதோ அதுவே அந்த அணியின் மதிப்பு ஆகும். இதே போன்று எதிர் அணியினரும் கீந்துவார்கள்.



# காலநிலை எதிர்வுகூறல்

- பூமியிலும் வானிலும் ஏற்படக் கூடிய மாற்றங்களை முன்னதாகவே மனிதர்களுக்குத் தெரியப்படுத்தல் காலநிலை எதிர்வுகூறுதல் எனப்படும்.
- பூமியிலும் வானிலும் தினம் தினம் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.
- சில வேளைகளில் கடும் வெப்பம் நிலவுகிறது. சில நேரங்களில் பெருமழை பொழிகிறது.
- திடீரென கடும் குளிர் பனிப்பொழிவு, திடீரென கடும் புயற்காற்று வீசுகிறது.
- கடும் வெப்பம் நிலவும் இன்னும் கடற்பெருக்கு, பூகம்பம், சுனாமி போன்றவையும் ஏற்படும்.
- இவையெல்லாம் காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள்
- இவ்வாறு வரப்போகும் காலநிலை மாற்றங்கள் முன்னதாகவே அறியப்படும் கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- செய்மதிகள் ராடர்கள், றேடியோ, சவுண்ச் போன்றவற்றின் மூலம் காலநிலை மாற்றங்களை முன்னதாகவே தெரிந்து கொள்ளலாம்.
- செய்மதிகள், வானிலை மாற்றங்களைப் படம் பிடித்துப் பூமிக்கு அனுப்புகின்றன.
- அவற்றை அடிப்படையாகக் கொண்டே தொலைக்காட்சி, வானொலி என்பவை பத்திரிகைகள் வானிலை எதிர்வு கூறலைச் செய்கின்றன.
- இவற்றைவிட ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் காலநிலை அவதான நிலையங்கள் உள்ளன.
- அவையும் அன்றாட வெட்பதட்ப நிலைகளை கணித்துக் கூறுகின்றன.
- இந்த வானிலை எதிர்வுகூறல்கள் மக்களின் நலன் கருதியே தெரிவிக்கப்படுகின்றன.
- ஆதலால் அவற்றைக் கவனத்திற் கொண்டு செயற்படுதல் மக்கள் தம் கடமையாகும்.

# பூனை அண்ணா

எங்கள் வீட்டு பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தை சுத்தப்படுத்தும்
நாற்காலியின் கீழ் படுக்கும்



# ஆறுமுக நாவலர்



ஆறுமுக நாவலர் தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர்.

தமிழ், சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர்.

யாழ்ப்பாணம், நல்லூரில் தோன்றியவர்.

தமிழ் நூல்களை முதன் முறையாகச் செவ்வையான வகையில் பதிப்பித்தவர்.

திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற் காண்டிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களையும் திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதித்தவர்.


போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் எனும் பழைமையான சிவபெருமான் திருக்கோயிலை மீண்டும் உருவாக்க முயற்சி செய்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில் நாவலர் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆறுமுக நாவலரின் நினைவாக இலங்கை அரசு 1971 அக்டோபர் 29 இல் நினைவு அஞ்சல்தலை ஒன்றை வெளியிட்டது.

வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து செப்டம்பர் 1848 இல் தமது மத்திய கல்லூரியின் 3 பவுண் மாதச் சம்பள ஆசிரியப் பணியைத் துறந்தார்.


## வர்ணம் தீட்டுவோம்





## மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி கந்தையா



பிறப்பு 17.04.1933 இறப்பு 28.02.2019

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் தற்போது நவாலியில் வாழ்ந்து வந்த சின்னத்தம்பி கந்தையா நேற்று (28.02.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம் தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் தங்கரத்தினத்தின் (கிச்சி) அன்புக் கணவரும் கருணைறஞ்சினி (ஜேர்மன்), கருணை தேவாஜினி (பிரான்ஸ்), கருணைமலர் (நவாலி), கருணைராகினி (ஜேர்மன்), ரதிகா (சுவிஸ்), சுதா (பிரான்ஸ்), கோகுலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), பிரபாகர் (பிரான்ஸ்), நிர்மலேஸ்வரன் (நவாலி - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), பாலகிருஸ்ணன் (சுவிஸ்), ஜீவாகரன் (பிரான்ஸ்), சரணியா (கொல்லங்கலட்டி) ஆகியோரின் மாமனாரும் அனுசன், மதுசன், மிதுசன் (ஜேர்மன்), சுதனிகா, யுதர்ஷணன் (பிரான்ஸ்), டிலக்சேஸ்வரன் (பல்கலைக்கழகம், மொறட்டுவ), விதுஷனா (கொக்குவில் இந்து கல்லூரி), நிதர்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), சங்கவி, வசிகரன், சர்மியா (ஜேர்மனி), பானுஷன், ரகுஷணன், டிகுஷனா (சுவிஸ்), கிருஷ்ணன், சஸ்விகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் கனகேஸ்வரி (கனடா), இராசம்மா (மாவிட்டபுரம்), காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி (கொக்குவில்), காசிநாதன் (வவுனியா), ரேவதி (பிரான்ஸ்), கருணாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற செல்லத்துரை, கந்தசாமி, இராஜதுரை,நவரத்தினம்,மற்றும்கனகேஸ்வரி(பிரான்ஸ்),செல்வரத்தினம்(கொல்லங்கலட்டி), குணரத்தினம் (சங்கரத்தை), இராஜேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் கொல்லங்கலட்டியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 10 28 385 (மனைவி),
077 42 00 304 (காந்தன் - மருமகன்)

## தமக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாது. தற்கொலை தாக்குதல்கள் மதத்தின் பெயரால் நடப்பவை இல்லை. அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு முன்னதாகவே உலக அளவில் வீரியமான தற்கொலை தாக்குதலைளை விடுதலை புலிகள் நடத்தியிருந்தனர்.

விடுதலைப் புலிகள் சார்பில் தற்கொலை தாக்குதல் நடத்தியவர்கள் அனைவருமே இந்துக்கள். அவர்கள் மதத்தின் பெயரால் நடத்தவில்லை. மாறாக தங்களது விரக்தி மற்றும் கோபத்தின் விளைவாகவே அதனைச் செய்தனர்' - என்றார். (ம)

### தவறிவிட்டது

நாவலர் றெயில்வே வீதியில் இருந்து பெருமாள் வீதிக்கு இடையில் வாகன புத்தகம் MBWF 6273 தவறிவிட்டது. தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

- 077 918 2942/077 639 8349

### மணமகள் தேவை

1989 ஆம் ஆண்டு பிறந்த யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

075 474 4096

(CS/22669)(11.17)

### காணவில்லை

காதில் இலக்கம் உள்ள கொம்பில் கயிற்றுடன் மா வெள்ளை. பட்டிக்கொம்பு, நெற்றியில் வெள்ளை பொட்டு. கட்டையானது கன்று ஈனும் நிலையில் உள்ள பசு கடந்த 24.02.2019 இருந்து காணவில்லை. கண்டவர்கள். தகவல் ஏதும் தெரிந்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

076 991 0953, 076 924 0692, 077 078 2270

### சேவைநலன் பாராட்டு



யாழ். போதனா வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தராகவும் விடுதிச்சகோதரியாகவும் 39 வருடங்கள் சேவையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச்செல்லும்

திருமதி

**மார்க்கண்டு மல்லிகாதேவி**

சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம்
யாழ்ப்பாணம்

## LOLC FINANCE PLC
## Gigantic Motor Vehicle Auction Sale

**On Tuesday 05th March 2019**

To Be Held At
Station Road, Vairavapuliyankulam, Vavuniya.

**BUS**

| | | | | |
|---|---|---|---|---|
| MITSUBISHI DELICA | 2470CC | 1995 | NP | NB XXXX |

**FOUR WHEEL TRACTOR**

| | | | | |
|---|---|---|---|---|
| JOHN DEERE 5047D | 2300CC | 2011 | NC | RC XXXX |
| MAHINDRA 575DI | 2730CC | 2017 | NC | RF XXXX |
| YANMAR F20D | 1394CC | 2008 | NC | RE XXXX |

**MOTOR BIKE**

| | | | | |
|---|---|---|---|---|
| BAJAJ PULSAR | 150CC | 2016 | NP | BDX XXXX |
| BAJAJ CT 100 | 99CC | 2017 | NP | BFW XXXX |
| BAJAJ CT 100 | 100CC | 2014 | NP | BBB XXXX |
| BAJAJ CT 100 | 100CC | 2017 | NW | BEY XXXX |
| BAJAJ DISCOVER | 124CC | 2017 | NC | BFJ XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2013 | NP | BAL XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2014 | NP | BBD XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2016 | NP | BDN XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | NP | BAD XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | NP | BBQ XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | NP | BCV XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | NC | BEL XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | NP | BEB XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | NP | BEN XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2017 | NP | BFU XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2017 | NP | BET XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2018 | NP | BGU XXXX |
| DEMAK D7 | 125CC | 2014 | NP | BFL XXXX |
| DEMAK DZR | 120CC | 2016 | NP | BFP XXXX |
| DEMAK DZR | 120CC | 2017 | NP | BFN XXXX |
| DEMAK SAVAGE | 120CC | 2017 | NP | BGK XXXX |
| DEMAK SPARK | 90CC | 2017 | NP | BFU XXXX |
| DEMAK WARRIOR | 150CC | 2017 | NP | BFY XXXX |
| DEMAR DTM | 150CC | 2017 | NP | BFH XXXX |
| HERO DASH LX | 110CC | 2015 | NP | BDE XXXX |
| HERO DASH VX | 110CC | 2016 | NP | BES XXXX |
| HERO DAWN | 98CC | 2014 | NP | BBD XXXX |
| HERO DUET LX | 110CC | 2016 | NP | BEZ XXXX |
| HERO GLAMOUR | 124CC | 2017 | NP | BFK XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2014 | NP | BBY XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2016 | EP | BER XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2017 | NP | BEX XXXX |
| HERO HF DELUXE | 98CC | 2015 | NP | BCR XXXX |
| HERO HONDA | 225CC | 2015 | NP | BCL XXXX |
| HERO HUNK | 150CC | 2017 | NP | BFR XXXX |
| HERO HUNK | 150CC | 2013 | NP | BAG XXXX |
| HERO HUNK | 150CC | 2013 | NP | BAX XXXX |
| HERO HUNK | 150CC | 2016 | NP | BEO XXXX |
| HERO KARIZMA | 223CC | 2014 | NP | BCC XXXX |
| HERO MAESTRO | 102CC | 2017 | NP | BFL XXXX |
| HERO PLEASURE | 100CC | 2014 | NC | BCA XXXX |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP | BBX XXXX |
| HERO PLEASURE | 100CC | 2015 | NP | BCT XXXX |
| HERO PLEASURE | 100CC | 2016 | NP | BDI XXXX |
| HERO SPLENDOR | 98CC | 2014 | NP | BBK XXXX |
| HERO SPLENDOR | 98CC | 2014 | NP | BAV XXXX |

**MOTOR BIKE**

| | | | | |
|---|---|---|---|---|
| HERO XTREME | 150CC | 2015 | NP | BDC XXXX |
| HERO I SMART | 109CC | 2017 | NP | BFJ XXXX |
| HONDA ACTIVA | 110CC | 2016 | NP | BEV XXXX |
| HONDA CD DREAM | 110CC | 2017 | NP | BFW XXXX |
| HONDA CD-110 | 109CC | 2017 | NP | BFS XXXX |
| HONDA DIO | 109CC | 2014 | NP | BCC XXXX |
| HONDA DIO | 109CC | 2014 | NP | BBS XXXX |
| HONDA DIO | 110CC | 2016 | NC | BER XXXX |
| HONDA DIO | 110CC | 2016 | NP | BES XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | NC | BFP XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | NP | BFD XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | NP | BFK XXXX |
| HONDA HORNET | 160CC | 2016 | NP | BEU XXXX |
| HONDA SHINE | 125CC | 2014 | NP | BAZ XXXX |
| HONDA TWISTER | 110CC | 2017 | NP | BEU XXXX |
| HONDA SCOOTY | 110CC | 2016 | NP | BEP XXXX |
| HONDA GIXXER | 150CC | 2017 | NP | BFN XXXX |
| TVS APACHE | 180CC | 2014 | NP | BBY XXXX |
| TVS APACHE | 180CC | 2017 | EP | BFV XXXX |
| TVS METRO | 98CC | 2017 | NC | BFJ XXXX |
| TVS SCOOTY PEPT | 90CC | 2016 | NC | BES XXXX |
| TVS WEGO | 110CC | 2018 | NP | BGV XXXX |
| TVS WEGO | 110CC | 2018 | NP | BGS XXXX |
| TVS XL | 70CC | 2017 | NP | BFQ XXXX |
| TVS XL | 100CC | 2017 | NP | BFV XXXX |
| YAMAHA FAZER | 150CC | 2016 | NP | BEP XXXX |
| YAMAHA FZ-S | 153CC | 2015 | NP | BCE XXXX |
| YAMAHA FZ-S | 150CC | 2017 | NP | BGF XXXX |

**ROTAVATER**

| | | | | |
|---|---|---|---|---|
| SONALIKA DI 50RX | 2893CC | 2016 | NC | RE XXXX |

**THREE WHEELER**

| | | | | |
|---|---|---|---|---|
| BAJAJ | 145CC | 2006 | NP | QE XXXX |
| BAJAJ | 145CC | 2006 | NP | QF XXXX |
| BAJAJ | 150CC | 2003 | NP | HI XXXX |
| BAJAJ | 150CC | 2004 | NC | JS XXXX |
| BAJAJ | 173CC | 2007 | NC | QL XXXX |
| BAJAJ | 173CC | 2010 | NP | YB XXXX |
| BAJAJ | 198CC | 2010 | NP | YG XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NP | YR XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NP | YQ XXXX |
| BAJAJ | 198CC | 2012 | NP | AAI XXXX |
| BAJAJ | 198CC | 2013 | NC | AAG AAG |
| BAJAJ | 198CC | 2013 | NW | AAI XXXX |
| BAJAJ | 198CC | 2014 | NC | AAQ XXXX |
| BAJAJ | 198CC | 2015 | NP | AAZ XXXX |
| BAJAJ | 198CC | 2015 | NC | AW XXXX |
| BAJAJ | 198CC | 2016 | NP | ABM XXXX |
| PIAAGGIO | 395CC | 2008 | SG | QS XXXX |
| TVS KING | 200CC | 2013 | NP | AAN XXXX |

**TWO WHEEL TRACTOR**

| | | | | |
|---|---|---|---|---|
| SIFANG GN 12DI | 815CC | 2015 | NP | SO XXXX |
| HIKARIE VIKYNO | 624CC | 2016 | NP | SO XXXX |
| SIFANG GN 12 DI | 815CC | 2015 | NC | SO XXXX |

**On View – 02nd, 03rd, & 04th March 2019**
Between 9.00 a.m – 5.00 p.m

**Conditions of Sale**

✓Entrance: By a non refundable Ticket of Rs. 500.00 per person & a refundable deposit of Rs. 5,000.00 per person on the day of Auction.
✓Payment: Non – refundable initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% & Removal latest by 3:00 pm on Tuesday 12th March 2019 to be paid to LOLC Finance PLC No.27, 2nd Cross Street, Vavuniya.
✓The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.
✓The decision of the Auctioneer will be final.

**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
6A, Fairfield Gardens, Colombo 08.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

காரைநகர்
### கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்
### ஸ்தாபகதின நிகழ்வு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்
காலம் : 01.03.2019 வெள்ளிக்கிழமை
பி.ப. 5.00 மணி

**சிறப்புப் பட்டிமண்டபம்**

"யாழ். மண்ணின் பெருமைக்கு பெரிதும் காரணம்"
படிப்பே! பண்பாடே! பக்தியே!

நடுவர் :
கம்பவாரிதி **இ.ஜெயராஜ்** அவர்கள்



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.

### ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1548 | சீட்டிழுப்பு திகதி 28.02.2019

வெற்றி இலக்கங்கள்: 08 21 40 62 V

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 27 , 148, 316/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 2019.03.04 திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

திகதி 28.02.2019 | வெற்றி வாரம் 2467 | வர்ணம் கபிலம்

சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 49 54 59 62
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 658, 282/=

01.03.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

### அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 540
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.02.28

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 67,610,270/-

வெற்றி இலக்கங்கள்: 06 12 20 70 Q

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி சிவகரன் தர்மிளா அவர்களின் பாசமிகு தந்தையார்

**சிவக்கொழுந்து இராசதுரை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்.

(CS/23650)(11.17)

### மரண அறிவித்தல்

**திருமதி சிவக்கொழுந்து பாலசிங்கம்**



பிறப்பு 01.02.1947 இறப்பு 28.02.2019

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து பாலசிங்கம் நேற்று (28.02.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2019) வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

**வடமாகாண வரி மதிப்பீட்டாளர்**
பிரதி சனி 9.00 → 3.00

**நீதிமன்ற பதிவாளர், புள்ளி விவரவியலாளர்**
பிரதி சனி 9.00 → 3.00

**SLEAS, SLAS, LLB**
சனி, ஞாயிறு 9.00 → 4.00

**076 688 3394**
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

## அதிகாரப்...

இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எம்.ஏ.சுமந்திரனும், ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் ராஜித சேனாரட்னவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் சரத் அமுனுகம மற்றும் டிலான் பெரேரா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வேண்டுகோளுக்கு அமைவாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூட்டினார். இந்தக் கூட்டம் அரச தலைவர் செயலகத்தில் நேற்று மாலை 6.30 மணியிலிருந்து 7.45 மணி வரை இடம்பெற்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, ராஜித சேனாரட்ன, ரவூப் ஹக்கீம், மனோகணேசன், திகாம்பரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, சரத் அமுனுகம, நிமல் சிறிபாலடி சில்வா, பைசர் முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியின் தேக்க நிலமை தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஆராயப்பட்ட தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம், அதிகாரப் பகிர்வு ஆகிய விடயங்களில், தேர்தல் முறைமை மற்றும் நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் அனைத்துக் கட்சிகள் இடையேயும் பொது இணக்கப்பாடு இல்லை என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதிகாரப் பகிர்வு தொடர்பில் இணக்கப்பாடு இருப்பதால், அதனை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 4பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு ஒரு வார காலத்தினுள் அறிக்கையை சமர்பிக்கும். அதன் பின்னர் மீண்டும் சர்வ கட்சிக் குழுக் கூட்டம் நடைபெறும். (ஓ.5,22,31,105)

# நன்றி நவிலலும் வீட்டுக்கிரித்திகை அழைப்பும்

எமது வைத்தியகுருவும் குடும்பத்தின் முதல்வருமான ஆயுள்வேத வைத்தியர்

## அமரர் க.ஒ. இராஜரட்ணம்

*(சிங்கள மொழியில் ஆயுள்வேத சர்வாங்க பொதுப்பரீட்சையிலும் விசக்கடி விசேட பரீட்சையிலும் சித்தியடைந்த அரச பதிவு பெற்ற 24 வது பாரம்பரிய வைத்தியர்)*



**தோற்றம் 24.02.1948 மறைவு 31.01.2019**

எம்மவரின் சிவசாயுச்சிய செய்திகேட்டு சுஜிவா வைத்தியசாலை, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்வலமாக பாலிநகர், வவுனிக்குளம் எனும் முகவரியிலுள்ள சுஜிவா வைத்தியசாலையின் கிளை அமைந்துள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டவேளையிலும் மயானம்வரை இறுதி ஊர்வலத்திலும் பங்குபற்றி துயர் பகிர்ந்துகொண்ட உறவினர்கள், நண்பர்கள், பெரியோர்கள் அனைவருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அன்னாரது வசிப்பிடமான பாலிநகர் சென்றபின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்திற்கு வருகைதந்த அனைவருக்கும் தொலைபேசி மற்றும் அஞ்சல் மூலமாக அனுதாப செய்தி தெரிவித்தவர்களுக்கும் குறுகியகால பத்திரிகை அறிவிப்பை ஏற்றுக்கொண்டு துயர் பகிர்ந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைதெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை 02.03.2019 சனிக்கிழமை காலை 7.00 மணிமுதல் சமயக்கிரியை இடம்பெற்று மதியம் 12.00 மணியளவில் காங்கேசன்துறை வீதியில் சுஜிவா வைத்தியசாலையின் அருகில் அமைந்துள்ள நாச்சிமார் கோவில் (வண்ணை காமாட்சி அம்மன் ஆலயம்) மண்டபத்தில் நடைபெறும். ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மகேஸ்வர பூசையிலும் (மதியபோசனம்) கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

சுஜிவா வைத்தியசாலை
நாச்சிமார் கோவில் அருகாமை
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

# Job Opportunity

Applications are invited for the post of Administrative Secretary on contract basis.

| | |
|---|---|
| Experience | ➤ Minimum five years supervisory and office management experience with the govt. depts, or NGOO |
| | ➤ Excellent communication skills in English (Verbal, written and presentation) |
| Salary | Negotiable |
| Age limit | 55 - 60 years |

Candidate fulfilling the above mentioned criteria should send their CVs along with the educational and experience certificates under registered post to reach the

Chairperson
Jaffna Jaipur Centre for Disability Rehabilitation
5, Old Park Road, Chundikuli, Jaffna on or before 8.3.2019

(in.9504)

# மரண அறிவித்தல்

# தேவசகாயம் ஜோண் *(பாலன்)*



மலர்வு 25.12.1941 உதிர்வு 27.02.2019

குருநகரைப் பிறப்பிடமாகவும் இரணைப்பாலையை வதிவிடமாகவும் கொண்ட தேவசகாயம் ஜோண் (பாலன்) கடந்த (27.02.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - மரியப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மிக்கேல்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் வில்பிறற்றம்மாவின் (மலர்) அன்புக் கணவரும் ஜோண்சன் (நோர்வே), யூட்சன் (லண்டன்), யூட்சினி, ராஜினி (சுவிஸ்), றொசானி (ஜேர்மன்), சுசி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நோர்வேயைச் சேர்ந்தவர்களான செல்வரட்ணம் அருள்ம்மா, ஜசிந்தா, மரியம்மா (குருநகர்), தவமணி, காலஞ்சென்ற பிரான்சிஸ் சவுந்தரம், வசந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் வெனற்றோ, செபஸ்ரியான், யோகநாயகம், செபமாலை, ஜெயசீலன், பத்மினி, காலஞ்சென்ற ஸ்ரெலா, ஸ்ரனிஸ்லோஸ், ராணி, காலஞ்சென்ற பிறேமன், பவளம், ரட்ணராஜா (கிராம சேவையாளர் J/132) ஆகியோரின் மைத்துனரும் ஜமிலா (நோர்வே), டென்சி (லண்டன்), சுகிர்தன், மோகன் (சுவிஸ்), யூட் (ஜேர்மன்), வசந்தன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் யஸ்ரிக்கா, யஸ்ரிக்கன், மனிக்கா, டிவ்யா, யூலியன், ஒவியா, ஸ்ரெபானி, ஸ்ரெபான், சுவேதா, ஸ்ரீபன், அஸ்வின் ஜெறோம், ஜெறோனா, ஜெறோன், நிர்மிகா, நிந்துஜா, நிவிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (01.03.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இரணைப்பாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**மகன் : ஜோண்சன் (0047 97173269)**
**மருமகன் : சுகிர்தன் (077 345 4583)**

(CS 23136/15/17)



உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

## யாழ். மரியன்னை பேராலயம்
### சேமக்காலை தொடர்பான முக்கியமானதும் இறுதியுமான அறிவித்தல்

யாழ். புனித மரியன்னை சேமக்காலையிலுள்ள (புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை) பல கல்லறைகள் கவனிப்பாரற்ற நிலையிலும் சிதைந்த நிலையிலும் உள்ளன. நீண்ட காலங்களாக இக் கல்லறைகள் தொடர்பாக ஆலயங்களில் தொடர்ச்சியான அறிவித்தல் வழங்கப்பட்டும் கல்லறை உரிமையாளர்கள் இது தொடர்பாக எதுவிதமான கரிசனையும் செலுத்தவில்லை. எனவே இக் கல்லறைகளின் உரிமையாளர்கள் அல்லது அவர்களின் பின் உரித்தாளர்கள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ இருப்பின் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட ஒரு மாத கால எல்லைக்குள், இக் கல்லறைகளை உரிய முறையில் பொறுப்பேற்றுப் பராமரிக்கவும் அவற்றை சீரமைக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இது தவறும் பட்சத்தில் இக்கல்லறைகள் உரிமையாளரற்ற, பராமரிப்பற்ற கல்லறைகளாக கணிக்கப்பட்டு இக் கல்லறைகளைப் பேராலயமானது கையகப்படுத்த உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

இது தொடர்பாக மேலதிக விவரங்களுக்குப் பேராலயப் பங்குப் பணிமனையில் ஞாயிறு, கடன்திருநாள்கள், போயா தினம் மற்றும் பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரையும் பிற்பகல் 3.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரையும் பங்குத் தந்தையை அல்லது அலுவலகப் பணியாளர்களைத் தொடர்பு கொள்ளமுடியும்.

தொடர்பு - 021 222 2457

அருட்தந்தை R.C.X.நேசராஜா
புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.





# இரும்பு அகற்றல்

அதிரடி விலைக்கழிவு
1.3.2019 தொடக்கம்
5.3.2019 வரை

35 % முதல் 50 % வரை

குளியலறை மாபிள்கள் (சுவர் மற்றும் நிலம்)
மற்றும் குளியலறை சாதனங்கள்

**கையிருப்பு உள்ளவரை**



HOUSE OF CERAMIC K.K.S. ROAD, JAFFNA.
(பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)

உ
சிவமயம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
18 . 12 . 1932



மறைவு
31 . 01 . 2019

அமரர்
### பரிபூரணம் இரத்தினசிங்கம் (பேபி)
(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்)


கடந்த 31.01.2019 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் பரிபூரணம் இரத்தினசிங்கம் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (02.03.2019) சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கோபாலன் குடிசை"
இல.03,வைமன்வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 3554

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
08 . 03 . 1926



உதிர்வு
24 . 02 . 2019

அமரர் வைத்திய நிபுணர்
### சிவசப்பு பத்மநாதன்
(இளைப்பாறிய நோய்க்கூற்று ஆய்வாளர், யாழ். போதனா வைத்தியசாலை)

ஏழாலை மண்ணிலே உருவாகி திருநெல்வேலியிலே நிலையாகி
நோயியலை ஆய்கின்ற நாயகனாய் பணி செய்தீர்!
கிளிமொழியாலே வித்தகராய் ஆக்கிவிட்ட
பத்மநாத தீபமே ! காலமெனும் சுழிக்காற்றில்
கரைந்தே போனீரோ? எம் சுவாசக் காற்றாக
என்றென்றும் வாழ வைப்பீர்!
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

'யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களின் அமையம்'

# வீரர்களின் துடுப்பாட்டப் போர்
# 2019 மார்ச் 01,02,03

## 01ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் 03ஆம் திகதி பி.ப 5.00 மணிவரை

## ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நண்பர்களின் போர் ( T20 )

## யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி


Standing 1st Row (L-R): R.Ajinthan, D.Amirthasrathan, S.Danoraj, G.Nigarjan, K.Dilaxan
Standing 2nd Row (L-R): S.[illegible], T.Jesuran, S.Sobithan, L.Laxsan, S.Dhasan, J.Kalistan, S.Dackson, K.Rekam, S.Danam
Seated: (L-R): Mr.R.Rajakanthan (Prefect of Games), S.Prasan (Vice Captain), Mr.M.Selvasthan (Principal), A.Thanusan (Captain)
Mr.V.Umasuthan (Cricket Co-ordinator MIC), Mr.S.Jeyatharan (Coach)

## தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி


Standing 1st Row (L-R): A.Sivakaran, S.Sayanthan, S.varalakxan, L.Apsorvan, R.Thanistan
Standing 2nd Row (L-R): U.Anjithdavid, S.Sisaksan, U.Mathevsan, T.Rajinthan, S.Jamshan, T.Vanushan, S.Saiturjan, J.Jathurjan
Seated (L-R): T.bakeerathan (Master incharge), K.Kokulakanth (Cricket Co-ordinator), K. mayilvakanam (P.O.G), S.Bavan (Deputy Principal), M.Bakeerathan (Captain)
M.Manisekaran (principal), R.Sujan (Vice Captain), V.Santhirasekaram (Deputy principal) K.Vasantharuban (Sports Co-ordinator), R.Mathusan (Coach)

### துடுப்பாட்டப் போரில் வீரர்களும் நண்பர்களும்



யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி துடுப்பாட்ட அணிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி துடுப்பாட்ட அணிக்குமிடையிலான மாபெரும் "வீரர்களின் போர்: என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டப் போர் இம்மாதம் 01 ஆம், 02 ஆம் 03ஆம் திகதிகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளமை துடுப்பாட்ட இரசிகர்களுக்கு மாபெரும் விருந்தாக அமைகின்றது.

இன்றைய இளைஞர்களிடத்தே கிரிக்கெட் என்பது மிக முக்கியமான விளையாட்டாக உருவெடுத்துள்ளது. ஆயினும் இலங்கைக் கிரிக்கெட் அணியில் தமிழ் வீரர்களின் உள்ளடக்கம் என்பது மிக அருந்தலாகவே உள்ளது. அதற்காக திறமையான வீரர்கள் தமிழ் சமூகத்தில் இல்லை என்று அர்த்தமல்ல. தென்பகுதி வீரர்களுக்குக் கிடைக்கும் வசதிகளும், அதிகளவான போட்டிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பங்களும் அவர்களை சர்வதேச போட்டிக்கு தெரிவு செய்யும் வாய்ப்புக்களை பிரகாசமாக்கி அவர்களுக்கான எதிர்காலத்தை வளப்படுத்துகின்றன. எனவே இந்த வீரர்களின் போர் எமது பிரதேசத்தில் இலை மறை காயாக இருக்கும் சிறந்த கிரிக்கெட் வீரர்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கு தேசிய அணியில் இடம் கொடுத்து சர்வதேச வீரர்களாக மாற்ற வழிவகுக்கும் என நம்புகிறேன். இப்போர் சிறக்கவும் விளையாட்டு விதி முறைகளைப் பின்பற்றி வீரர்களும் இரசிகர்களும் உற்சாகமடையவும் என வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**கௌரவ ஈ.சரவணபவன்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**யாழ். மாவட்டம்.**

### வீரர்களின் போர் சிறப்புறவாழ்த்துக்கின்றேன்



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும், யா/மகாஜனாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெறும் வடக்கின் சமர் என வர்ணிக்கப்படும் "வீரர்களின் போர்" துடுப்பாட்டபோட்டியானது இன்று முதல் 03ஆம் திகதிவரை யா/ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுவதனையிட்டு மனமகிழ்ச்சி யடைவதுடன், இரு கல்லூரிகளின் ஒற்றுமை, பலம் என்பவற்றை வெளிக் கொணரவும், இரு கிராமங்களை இணைக்கும் துடுப்பாட்டப் போட்டியாகவும் நிகழ்ந்துவரும் இப்போட்டிக்கு ஸ்கந்தாவின் சுவிஸ் பழைய மாணவர் சங்கம் அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கனவான்களின் விளையாட்டு எனச் சிறப்பிக்கப்படும் துடுப்பாட்டப் போட்டியானது வெற்றி தோல்வி என்ற நிலைக்கு அப்பால் ஒற்றுமையை மைதானத்தில் வலுப்படுத்துவதாக அமையப் பெற்றமை யிட்டு வாழ்த்துவதுடன் ஸ்கந்தப்பெருமானின் அருளுடன் போட்டிகள் சிறப்புற நிகழ வாழ்த்துகின்றேன்.

**திரு.மு.செல்வஸ்தன்,**
**அதிபர்,**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

### விளையாட்டுமுதல்வரின் வாழ்த்துச் செய்தி



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 01.02.03 ஆகியதிகதிகளில் இடம் பெறவுள்ளவீரர்களின் போர் என அழைக்கப்படும் வடக்கின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி இவ்வருடம் 19ஆவது போட்டியாக இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் துடுப்பாட்டப் போட்டிக்கு ஸ்கந்தாவின் சுவிஸ் பழையமாணவர் சங்கம் தனது அனுசரனையை வழங்கியுள்ளது. கனவான்களின் விளையாட்டாகக் கருதப்படும் துடுப்பாட்ட போட்டியானது மாணவரிடையே சமநிலை ஆளுமையை வளர்க்கும் விளையாட்டுக்களில் முதன்மையானது. வடக்கிலிருந்து சிறந்த துடுப்பாட்ட வீரர்களை உருவாக்குவதற்கு இப் போட்டியானது தொடர்ந்தும் காத்திரமான பங்களிப்பினை வழங்கும் என எதிர்பார்க்கின்றேன். இத்துடுப்பாட்டபோட்டியில் தங்களுடைய சிறப்பான விளையாட்டுத் திறனை வெளிப்படுத்துவதற்கு இரு கல்லூரி வீரர்களுக்கும் எனது ஆசியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சு.ராஜகாந்தன் -**
**விளையாட்டு முதல்வர்**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

## Results of the matches

| Year | Result | Year | Result | Year | Result | Year | Result |
|---|---|---|---|---|---|---|---|
| 2001 | Drawn | 2006 | Drawn | 2011 | won | 2016 | MC won |
| 2002 | Drawn | 2007 | Drawn | 2012 | Drawn | 2017 | Drawn |
| 2003 | Drawn | 2008 | won | 2013 | won | 2018 | Drawn |
| 2004 | Drawn | 2009 | won | 2014 | won | | |
| 2005 | won | 2010 | won | 2015 | won | | |

### பிரதம விருந்தினரின் ஆசிச் செய்தி



வலிகாமம் பிரதேசத்தில் புகழ்பூத்த பிரபல கல்லூரிகளாக விளங்கும் யா/ஸ்கந்தவரோதயா கல்லூரியும் யா/மகாஜனா கல்லூரியும் நீண்ட நெடுங்காலமாக விளையாட்டுத் துறையிலும் தங்கள் திறமைகளை பறைசாற்றி வந்துள்ளன. தடகள போட்டிகளில் மட்டுமல்லாது உதைபந் தாட்டம் மற்றும் துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் சிறப்பாக தங்கள் திறன்களை வெளிப்படுத்தி வருகின்றமை பாராட்டுதலுக்குரியது.

விளையாட்டுப் போட்டிகளானது மாணவர்களிடையே புரிந்துணர்வு விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை ஆகியவற்றை வளர்த்தெடுப்பதோடு நல்லுறவையும் கட்டியெழுப்புவதில் பெரும்பங்காற்றுவன.

"Battle of the Heroes" என சிலாகிக்கப்படும், இரு கல்லூரிகளுக்குமிடையில் இன்றைய தினம் இடம்பெறும் 19ஆவது துடுப்பாட்ட தொடர் போட்டியானது சிறப்பாக நடைபெற வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

**கௌரவ த.சித்தார்த்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்.**

### மகாஜனக் கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி



கிராம மட்டத்திலும் துடுப்பாட்ட விளையாட்டை மேம்படுத்தும் நோக்கத்துடன் மாணவர்களுக்கிடையே நட்புறவு, வெற்றி தோல்விகளை சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு போன்றவற்றினை வளர்க்கும் முகமாகவும் 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பான முறையில் வீரர்களின் போர் துடுப்பாட்ட போர் நடத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக அனைவராலும் பாராட்டக்கூடியவாறு அண்மைக்காலமாக இரு பாடசாலைகளின் ஒத்துழைப்புடன் மிகக் கட்டுக்கோப்பாக நடத்தப்படுவது மகிழ்வைத் தருகின்றது. தொடர்ந்தும் இப்போட்டி சிறப்பாக நடைபெறவும் மாணவர்கள் தமது ஆளமையை வளர்த்துக் கொள்ளவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ம.மணிசேகரன் - அதிபர்**
**மகாஜனக் கல்லூரி.**

### ஸ்கந்தா பழைய மாணவர் தாய்ச்சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி



நூற்று இருபத்தைந்தாவது ஆண்டில் தடம் பதிக்கும் கந்தரோடை ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக ளின் மாபெரும் துடுப்பாட்ட போட்டியான "வீரர்களின் போர்", "நண்பர்களின் போர்" நிகழ்வு சிறப்பாக் இடம்பெற வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். கல்வியில் மட்டுமல்லாது அனைத்துத் துறைகளிலும் சாதனை புரிந்து புகழ் பரப்பி வரும் இவ்விரு கல்லூரிகளும் பத்தொன்பதாவது வீரர்களின் போர் நிகழ்வில் சங்கமிக்கின்ற இந்த இனிய தருணத்தில் இரு கல்லூரி மாணவர் ளுக்கும், பழைய மாணவர்களுக்கும், துடுப்பாட்ட இரசிகர்களுக்கும் இந்த நிகழ்வு பெரு விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை. இப்பெரு நிகழ்வில் கலந்து வீரர்களை உற்சாகப்படுத்துமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

**Rtn.செ.பிரதாப் - செயலாளர்,**
**பழைய மாணவர் தாய்ச்சங்கம்,**
**ஸ்கந்தவரோதயக் கல்லூரி.**

### பொறுப்பாசிரியரின் வாழ்த்துச்செய்தி



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும், யா/மாகாஜனாக் கல்லூரிக்கும் இடையில் இடம்பெறவுள்ள "வீரர்களின் போர்" என வர்ணிக்கப்படும் எனப்படும் 19ஆவது மாபெரும் துடுப்பாட்டபோட்டி இவ்வருடம் யா/ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியில் வெகுசிறப்பாக இடம்பெறவுள்ளது. வடமாகாணத்தில் சிறந்த தரமான துடுப்பாட்ட வீரர்களை உருவாக்குவதற்குரிய காத்திரமான பங்களிப்பினை வழங்கும் நோக்கில் இரு கல்லூரிகளாலும், இக் கல்லூரி களின் புகழ்பூத்த பழையமாணவர்களின் முற்சிந்தனையாலும் உருவாக்கப் பட்டு சிறப்பாக திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டுவருகின்றது. கல்லூரி யின் முன்றலில் அருள்பாலிக்கும் முருகப் பெருமான் அருளுடன் இப்போட்டி வழமைபோல் சிறப்பாகவும், கண்ணியமாகவும் நடைபெற எனது வாழ்த்தினைத் தெரிவிக்கின்றேன்.

**திரு.ஏ.உமாசுதன் - பொறுப்பாசிரியர்**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,**

**வீரர்களின், நண்பர்களின் போர் சிறப்புற வாழ்த்துவோர்**
**ஸ்கந்தவரோதயா கல்லூரி**
**பழைய மாணவர் தாய்ச்சங்கம்**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்துக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

**1.பஸ் நடத்துநர்**

**2. எழுதுவினைஞர்கள்**

(யாழ்.மாநகர சபைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)

ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்

**077 662 1201**

(CS/23658)(1.1.17)

## தேவை

யாழ்.நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் அச்சகமொன்றின் கணினிப் பிரிவில் பணியாற்றுவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம்.

**காலை 10 மணிக்குப் பின்னர் நேரில் வரவும்.**

**சரவணா அச்சகம்**

**233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/23661)(1.1.17)

### 15 தொலைக்காட்சிகள் வரை ஒரே ஃபைபர் இணைப்பில் சேவை வழங்குகின்ற இந்நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்களுக்கு PEO TV BIZ பொருத்தமான தொலைக்காட்சி தீர்வு

PEO TV BIZ

இந்நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையின் வர்த்தக இடங்களில் தொலைக்காட்சி சேவையின் தேவையை வழங்கு வதற்காக PEO TV BIZ என்ற பெயரில் மிகக் கவர்ச்சிகரமான தீர்வொன்றை வழங்குவதற்கு PEO TV நடவடிக்கை எடுத்துள் ளது.

இதன்படி குறித்த வர்த்தகத் தேவைக்கு அமைய. PEO TV BIZ செயல்முறை மூலம் 5 தொலைக் காட்சிகள் தொடக்கம் 15 வரை எண்ணிக்கையில் ஒரே ஃபைபர் இணைப்பு மூலம் PEO TV சேவையை பெற்றுக்கொள்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகர்களுக்கு சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அது வரையும் FTTH செயல்முறை மூலம் ஒரே தடவையில் 3 தொலைக்காட்சி இயந்திரங்கள் வரை. அர்ப்பணிக்கப்பட்ட (குறிப்பாக ஒதுக்கப்பட்ட) ஃபைபர் இணைப்பு ஊடாக ஒரே தடவையில் 15 தொலைக்காட்சி இயந்திரங்களுக்கு மேல் PEO TV சேவை வழங்கப்பட்டது. இதற்கு இடைப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்து செயற்படுகின்ற PEO TV BIZ மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகள் மீது குறித்த இடங்களில் தொலைக்காட்சி இயந்திரங்கள் பலதிற்கும் ஒரே தடவையில் சேவையை வழங்குவதற்காக மிகப் பொருத்தமான தீர்வொன்று வழங்கப்படுகிறது.

இந்நாட்டின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணி களுக்காக மத்திய தரத்திலான ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா இல்லங்களுக்கான கேள்வி அதிகரித்து வருகின்ற காலத்தில் PEO TV போன்ற தொலைக்காட்சி சேவை ஒன்று அங்கு நிறுவப் பட்டிருப்பது கட்டாய தேவையாக மாறியுள்ளது. இதன்போது ஒரு அறைக்கு ஒன்று என்ற வகையில் PEO TV தொலைக்காட்சி சேவையை பெற்றுக்கொள்வது நடைமுறைச் சிக்கல்கள் பலதையும் ஏற்படுத்துவதோடு. இவ்வாறு ஒரு ஃபைபர் இணைப்பு அனைத்து தொலைக்காட்சிகளுக்குமான தேவையை பூர்த்தி செய்து கொள்வது இதற்கு சிறந்த தீர்வாக அமையும். பல்பொருள் அங்காடிகள். வேறு காட்சியகங்கள். மருத்துவமனைகள் மற்றும் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றுக்கு தொலைக்காட்சி சேவையை பெற்றுக் கொள்வதற்கு இந்த PEO TV BIZ பொருத்தமான தீர்வாகும்.

PEO TV என்பது நிலையான அலைவரிசை ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற தொலைக்காட்சி சேவை வழங்கல் என்பதால் மழை போன்ற காலநிலை சூழலில் எந்த ஒரு ஒளிபரப்பு தடங்கலும் ஏற்படாத நம்பிக்கையான சேவையாகும். அதேபோன்று PEO TV சேவையை பெற்றுக்கொள்ளும் போது. தமது வாடிக்கையாளர்களின் தேவைக்கு அமைய முக்கியமாக தயாரிக்கப்பட்ட பக்கேஜ் களை தேர்வு செய்யும் சந்தர்ப்பம் வர்த்தகர்களுக்கு கிடைக்கும். அடிப்படை முதலீடு இன்றி அல்லது மிகக் குறைந்த அடிப்படை முதலீடு ஒன்றின் மூலம் இந்த சேவையை பெற முடியுமாக இருப்பதும் சிறப்பம்சமாகும். PEO TV சேவையை இணைக்கும்போது டிஸ்க் அல்லது அன்டெனா ஆகியன பயன்படுத்தப்படுவதில்லை என்பதால் ஹோட்டல் அல்லது வர்த்தக இடங்களில் பார்வை மற்றும் அழகுக்கு இதனால் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாது.

இதுபோன்ற காரணங்கள் அனைத்தையும் கவனத்தில் கொள்ளும்போது PEO TV மூலம் வழங்கப்படுகின்ற PEO TV BIZ என்ற இந்த "பல் வழங்கல் கொண்ட தனி இணைப்பு" இலங்கை வர்த்தகத் துறையில் இன்றைய காலத்தின் தொலைக்காட்சி சேவையின் தேவயை சிறப்பாக பூர்த்தி செய்கின்றது.

(C/32419)



Cardiff Metropolitan University

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

# MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

in Jaffna

7th Batch In jaffna

This MBA is aimed at those who are looking to develop their careers and at 'High Flyers' that need and understanding of all the major functions of business.

In addition to enhancing successful student's career prospects. This programme is delivered in Sri Lanka at ICBT Campus and is the identical programme conducted in UK.

**Entry Qualification**

- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

• Classes only on Sundays

**REGISTRATION NOW ON FOR MARCH INTAKE -2019**

Teaching Excellence Framework TEF Silver

Cardiff Metropolitan University has been awarded the Silver Teaching Excellence Framework (TEF) rating in the recent results published by the Higher Education Funding Council for England (HEFCE) - UK.

ICBT CAMPUS JAFFNA | EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency) | National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

More Information

**0770 746 553**

merojan@icbtcampus.edu.lk

### SDB வங்கியின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக திலக் பியதிகம பதவியேற்பு

30 வருடங்களுக்கு அதிகமான துறைசார் அனுபவத்தைக் கொண்ட திலக் பியதிகம. 2019 மார்ச் 01 ஆம் திகதி முதல் SDB வங்கியின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக பதவியேற்றுள்ளார். சிங்கப்பூர். ஐக்கிய அரபு இராஜ்ஜியம். ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் வங்கியியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ள இவர். ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி மற்றும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் பிரதம செயற்பாட்டு அதிகாரி யாக கடமையாற்றிய பியதிகம. மூலோபாயம். வங்கிச் செயற்பாடுகள். டிஜிட்டல் மாற்றங்கள். தொழில் நுட்பம். செயற்பாட்டு இடர் மற்றும் வாடிக்கையாளர் சேவை போன்ற பிரிவுகளில் நிபுணத்துவ அனுபவத் தைக் கொண்டுள்ளார். நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் இவர் கடமையாற்றிய காலப்பகுதியில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி. நுட்பமான செயன்முறைகள் மற்றும் வாடிக்கையாளர் களுக்கு நட்பான பகுதிகளில் கிளைகள் போன்றவற்றை நிறுவி அதனூடாக ஒப்பற்ற பாவனையாளர் அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கும். ஊழியர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். இலங்கையின் முதலாவது டிஜிட்டல் வங்கிச் சேவையான FriMi மற்றும் ஓபன் பாங்கிங் (Open Banking) API களை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியியல் நிறுவுவதில் இவர் முக்கிய பங்காற்றியிருந்தார்.

ஸ்டான்டர் சார்ட்டட் வங்கியில் இவர் பணியாற்றிய காலப்பகுதியில். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மூலோபாய செயற்திட்டங்களை விநியோகிப்பதில் முக்கிய பங்காற்றியிருந்த இவர். ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் செயற்பாடுகளை நிறுவுவதில் முக்கிய பங்காற்றியிருந்தார். இவர் சென்னை மற்றும் கோலாலம்பூர் ஆகிய நகரங்களுக்கு ஸ்டான்டர் சார்ட்டட் வங்கி மையப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுத்த போதும். சேர்க்கை மற்றும் கையகப்படுத்தல் பிரிவின் சார்பாக இலங்கை ஸ்டான்டர் சார்ட்டட் வங்கியின் Grindlays வங்கி கையகப்படுத்தலின் போதும் பிரதான பங்காற்றியிருந்தார்.

Lanka Financial Service Bureau இன் பணிப்பாளர் சபை அங்கத்தவராக பியதிகம திகழ்வதுடன். NIBM இன் கண்காணிப்பு சபை அங்கத்தவராகவும் திகழ்கிறார். வணிக முகாமைத்துவத்தில் முதுகலை பட்டத்தை கொண்டுள்ளதுடன். பிரான்ஸ் INSEAD மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் London Business School ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சிகளிலும் இவர் பங்கேற்றுள்ளார்.

(C/32417)

### இலங்கையில் இதுவரை அறிமுகமாகாத அதிசிறந்த மற்றும் உயர்தர iPad உற்பத்தியை Apple அறிமுகம் செய்துள்ளது.



இலங்கையில் Apple உற்பத்திகளுக்கான அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவரான அபான்ஸ் நிறுவனம் இதுவரை அறிமுகம் செய்துள்ள மிகச்சிறந்த மற்றும் துரிதமான iPad Pro உற்பத்தியை இப்போது விற்பனை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. மிகச் சிறந்த சிறப்பம்சங்கள், மிகச்சிறந்த டிஸ் பிளே மற்றும்சிறந்த இயக்கத்துடன் நவீன iPad Pro உருவாக்கப்பட்டுள்ளது.

உலகின் அதியுயர் தொழில்நுட்பத்துடன் வட்ட வடிவிலான விளிம்பைக் கொண்டுள்ள Liquid Retina டிஸ்பிளேயை கொண்டுள்ளது. Precision-milled glass, Advanced pixel masking, Sub-Pixel antialiasing மற்றும் புதிய Backlight இனால் Liquid Retina டிஸ்பிளே Apple உற்பத்திகளில் மிகவும் கவர்ச்சி கரமான மற்றும் நேர்த்தியான வர்ணங்களை கொண்ட டிஸ்பிளேயாக அறிமுக மாகியுள்ளது. வெளிப்புறத்திலும், உற்புறத்திலும் இயற்கை வர்ணங்கள் அவ் வாறே நேர்த்தியான முறையில் பார்க்கக்கூடிய Wide color support, True tone மற்றும் Anti-reflecting coating மூலம் புதிய iPad Pro வைக் கொண்டுள்ளது. ProMotion தொழில்நுட்ப டிஸ்பிளேயில் Ultra-smooth scrolling ஒன்றில் மற்றும் விசேட Responsiveness ஒன்றை இது கொண்டுள்ளது.

iPad Pro விற்கே தனித்துவமான ஆற்றல் மிக்க A12 Bionic Chip ஸ்மார்ட் சிப் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, புகைப்படங்களை எடிட் செய்யும் போது அல்லது 3D மொடியூல் தயார் செய்யும் போது சிறந்த செயல்திறன் மற்றும் Responsive இயக்கத்தை இது வழங்குகிறது. A12 Bionic Chip-Single-core செயற் பாட்டிற்கு மேலதிகமாக 35% வேகத்தில் இயங்குவதோடு, வெவ்வேறு செயற்பாடு களை நடைமுறைப்படுத்தும் போது 90% வரை இதன் இயக்கம் துரிதமாகின்றது. மேலும் இது கிர.'.பிக்ஸ் செயன்முறையை இருமடங்கு துரிதப்படுத்துவதோடு உயர் தரத்திலான சிறப்பு காட்சிகளை இது திரைப்படுத்துகிறது. இதிலுள்ள பேட்டரியின் ஆயுள் நீடித்துழைப்பதால் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் மிகவும் சிறப்பாக இயங்கும் ஆற்றலை இது கொண்டுள்ளது.

இதிலுள்ள Face ID சிறப்பம்சத்தினால் அதிக பாதுகாப்பு உள்ளதோடு, AR apps, USB-C கனெக்டர், iOS 12, உள்ளிட்ட மேலும் பல சிறப்பம்சங்கள் இதில் உள்ளன. இதன் தடிப்பம் 5.9mm ஆகும். மேலும் இந்த iPad Proவை 11 அங்குலம் மற்றும் 12.9 அங்குலம் ஆகிய அளவுகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

நவீன iPad Pro உற்பத்திகளை Colombo City Centre மற்றும் உலக வர்த்தக மையத்தில் அமைந்துள்ள Apple Mono Store இல் மற்றும் நாடளாவிய Abans-Apple iStore மற்றும் ஏனைய அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல் Amex, HSBC, Sampath Bank, Commercial Bank, Standard Chartered, NDB, DFCC, HNB, PanAsia Bank ஆகிய கடனட்டைகள் மூலம் 60 மாதங்கள் வரை வட்டியில்லாமல் சிறுக சிறுக செலுத்திடக்கூடிய வசதியை அபான்ஸ் உங் களுக்கு வழங்கியுள்ளது. நாடளாவிய அபான்ஸ் காட்சியறைகளுக்கு இன்றே வாருங்கள்.

(C/32418)

## யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

## சேவை நயப்பும் பாராட்டும்



### திருமதி சுரதா ராஜரட்ணம்

**(SLTS - 1)**

**(பகுதித் தலைவர்)**

Congratulations

**சேவை விவரம்**

| | |
|---|---|
| 03.09.1979 - 14.05.1981 | திருகோணமலை சென்சேவியர் மகா வித்தியாலயம் |
| 1981.05.15 - 1984.02.14 | திருகோணமலை மெதடிஸ் பெண்கள் பாடசாலை |
| 1984.02.15 - 1985.12.31 | கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை |
| 1986.01.01 - 1986.11.03 | புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை |
| 1986.11.04 - 1987.08.31 | கிழக்கு அரியாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை |
| 1987.09.01 - 1988.12.31 | யாழ்/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் |
| 1989.01.01 - 2014.01.05 | சென்சாள்ஸ் மகா வித்தியாலயம் |
| 2014.01.06 - இன்று வரை | யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை |

கல்விக்காய் முப்பத்தொன்பது
ஆண்டுகள் முழுமூச்சுடன் உழைத்தீர்.
ஆரம்பக்கல்விச் சிறார்க்கு
அன்னையாய்த் திகழ்ந்து
இந்து அன்னையின்
நூலகப் பொறுப்பேற்று
பொறுமையுடன் பெருமையும் சேர்த்தீர்
நீவிர் நூற்றாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

# விரைவான நீதியே உறவுகளின் எதிர்பார்ப்பு



சேரலாதன்

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அனுபவிக்கின்ற வேதனைகளையும், சுமக்கின்ற வலிகளையும் ஆட்சியாளர்கள் இன்னமும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ளாமல் இருப்பதன் வேதனையை அதை அனுபவிப்பவர்களுக்குத்தான் புரியும். ஆனால் இதற்குக் காரணமானவர்கள் எவ்வித மனச் சலனமுமின்றிச் சுதந்திரமாக உலவுகின்றமை ஏற்கத்தக்கதொன்றல்ல.

கடந்த 25ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது வேதனைகளை வெளிப்படுத்தும் வகையில் நடத்திய போராட்டம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. கண்ணீர் சிந்தியவாறு தமது தொலைந்துபோன உறவுகளின் படங்களை ஏந்தியவண்ணம் அவர்கள் நின்ற கோலத்தைப் பார்த்தவர்கள் தம்மை மறந்து சோகத்தில் ஆழ்ந்து நின்றதைக் காண முடிந்தது. ஆனால் இதற்குப் பதிலளிக்க வேண்டியவர்கள் கல்மனம் படைத்தவர்களைப்போன்று நடந்துகொள்கின்றனர். போரின் இறுதிக் கட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற பல இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை. இவர்கள் படையினரால் கொல்லப்பட்டனரா? அல்லது எங்கோ ஒரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனரா? இவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? அல்லது இறந்து விட்டனரா? என்பது தெரியாமல் அவர்களது உறவினர்கள் கலங்கி நிற்கின்றனர். ஒரு ஆண்டல்ல. பல ஆண்டுகள் இவர்கள் தமது உறவுகளைத் தேடி அலைந்து திரிகின்றனர்.

சிலர் மனநிலை பாதிக்கப்பட்டவர்களைப்போன்று நடந்துகொள்வதையும் காண முடிகின்றது. இறுதிப் போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரணடைந்த பலரது நிலையும் அறியாது அவர்களது உறவினர்கள் தவிக்கின்றனர். தமது கண்களுக்கு முன்பாகவே படையினரது வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டவர்களின் நிலையறிய இவர்கள் ஏங்கித் தவிப்பதையும் காண முடிகின்றது.

அது மட்டுமல்லாது வீடுகளில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவர்களும் காணாமல் போயுள்ளனர். இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் பலரும் காணாமல் போயுள்ளனர்.




இவர்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர் அவர்களது உறவினர்கள்.

அண்மைக் காலமாக போர் இடம்பெற்ற பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பெரும் தொகையான எலும்புக் கூடுகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்குப் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் எலும்புக் கூடுகளாக இவை இருக்கக்கூடுமென்ற ஐயமே இதற்கான காரணமாகும். ஆனால் இவை தொடர்பான விவரங்கள் இதுவரை வெளிவரவில்லை.



இதேவேளை 1996ஆம் ஆண்டு நாவற்குழி இராணுவ முகாமில் பணியாற்றிய படையினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட 24 இளைஞர்கள் தொடர்பாக இன்றுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இவர்கள் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இடம்பெற்றபோது சட்டமா அதிபரின் சார்பில் முன்னிலையான அதிகாரி இவர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களை வழங்க முடியுமெனக் கூறினார். அவ்வாறாயின் இந்த இளைஞர்கள் இறந்துவிட்டார்கள் என்றே அர்த்தம் கொள்ள வேண்டும். அவ்வாறாயின் அவர்கள் எப்போது கொல்லப்பட்டார்கள்? எங்கு வைத்துக் கொல்லப்பட்டார்கள்? எவரால் கொல்லப்பட்டார்கள்? போன்ற விவரங்கள் தெரிவிக்கப்படல் அவசியமானதாகும். இதை விடுத்து இறப்புச் சான்றிதழை வழங்கி விட்டுப் பிரச்சினை தீர்ந்ததென இருந்து விட முடியாது. அதுமட்டுமல்லாது போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து அரசு நழுவி வருவதையும் ஐ.நா. உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புக்கள் தெரிந்து வைத்துள்ளன. அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் கண்காணிக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் போர்க்குற்றவாளிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு அளிக்கக்கோரும் அமைச்சரவைப் பத்திரமொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. போர்க் குற்றச்சாட்டுக்களிலிருந்து படையினரைப் பாதுகாக்கின்ற தந்திரமே இதுவென்பதை ஊகிக்க முடிகின்றது. விடுதலைப்புலிகளை முற்றாகவே அழித்துவிட்டதாகக் கூறும் இலங்கையரசு அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்போவதாகக் கூறுவது வேடிக்கையானது. முன்னாள் போராளிகள் மறுவாழ்வு அளிக்கப்பட்டு அவர்கள் சமூகத்துடன் இணைந்துள்ள நிலையிலேயே பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

எது என்னவாக இருந்தாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு இனியும் காலம் தாழ்த்தாது நீதி வழங்குதல் வேண்டும். ஒரே நாட்டைச் சேர்ந்த ஓர் இன மக்கள் கவலையுடனும் வேதனையுடனும் இருப்பது முழு நாட்டுக்குமே ஏற்புடையதல்ல. இதனுடன் தொடர்புடைய குற்றவாளிகளை இனம் கண்டு நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனையும் வழங்கப்படல் வேண்டும். அதைவிடுத்து பொதுமன்னிப்பு வழங்குவதாகக்கூறிக் காலத்தைக் கடத்துவதால் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் பாதிக்கப்படவே செய்வார்கள்.

ஆசிரியருக்கான கடிதம்

## வேண்டாம் மாலை மரியாதைகள் இதுவன்றோ முன்மாதிரி

மேற்படி தலையங்கத்தில் உதயன் பத்திரிகையில் 17.02.2019இல் ஆசிரியருக்கான கடிதம் பகுதியில் வெளிவந்த செய்தி எல்லோரையும் சிந்திக்கவும் பாராட்டவும் தூண்டியுள்ளது. வட கிழக்கில் காணாமற் போனோர், விசாரணையின்றிச் சிறையில் வாடுவோர், சொத்திழந்தோர், குடியிருக்க வீடு இன்றி தெருவில் இருப்போர், ஊனமுற்றோர் என பலபேர் இப்பட்டியலில் அடங்குவர்.

இந்நிலையில் கிழக்குமாகாண ஆளுநர் கௌரவ எம்.எல்.ஏ.ஹில்புல்லா கூறிய அர்த்தமுள்ள கருத்துப் பாராட்டப்பட வேண்டியதே. மனமார பாராட்டுவோமாக. மாலைகள் அணிவித்து வரவேற்க வேண்டாமெனவும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்க வேண்டாம் எனவும் அவர் கண்டிப்புடன் கூறியதான செய்தி எத்தனை பேர் ஆளுநரின் கருத்தைக் கடைப்பிடிப்பார்கள்.

*சி.பாலசுப்பிரமணியம்*
*கோப்பாய்.*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



## தமிழைக் காக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பே

### உதவிக் கல்விப் பணிப்பாளர் சந்திரலிங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

செம்மொழியானதமிழ்மொழி இன்று அழிந்து கொண்டு செல்கின்றது. மொழி ஒரு இனத்தின் அடையாளம்.

தமிழ் மொழிக்கு தனித்துவமான இலக்கியப் பாரம்பரியம் உண்டு. அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக்காக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடைமையாகும் என்று வலிகாம கல்விவலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரலிங்கம் தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ்மொழித்தின சுற்று நிருபத்துக்கு அமைவாக வயாவிளான் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பாடசாலை மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர்களிடையே இன்று வாசிப்புத் திறன் குறைந்து வருகிறது. வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் வகையில் பாடசாலைகளிலும் வீடுகளிலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்,

தமிழை அர்த்தமுள்ள மொழியாக மாற்றவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# வடக்கு விவசாயிகளுக்கு கடன் திட்டம் அறிமுகம்

### மாகாண விவசாய அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகள் பொருள்களை உற்பத்தி செய்து அதனைச் சந்தைப்படுத்தும் செயற்பாட்டுக்கு கடன்களை வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது என்று மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம் முன்னேற வேண்டும் என்றால் விவசாயத்தில் நாம் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். காலம் காலமாக விளைவிக்கப்படும் பொருள்களைத் தவிர ஏற்றுமதிக்கு தேவையான பொருள்களை அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டும். விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உற்பத்தியாளர் ஒருவர் உற்பத்தி, அதனுடான வேலை வாய்ப்பு, சந்தைப்படுத்தல் ஆகிய மூன்று பகுதிகளையும் செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்.

உற்பத்தியாளரின் செயற்றிட்டத்துக்கு 40 வீதத்தை கடனாகவும், மற்றைய 40 வீதத்தை மானியமாகவும், 20 சத வீதத்தை அவர் தன்னுடைய மூலதன பணத்தில் இருந்தும் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

சிறப்பான செயற்றிட்டங்களுக்கு 20 மில்லியன் வரை கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் ஏற்றுமதி செய்யக் கூடிய மாம்பழச் செய்கை நடைபெற்று வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)



## வினாடி, வினா போட்டியில் யாழ். பல்கலைக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 1

பல்கலைக் கழகங்களுக்கிடையான வினாடி வினாப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் 2 ஆம், 3 ஆம் இடத்தை பெற்று வெற்றி பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சப்ரகமுவ பல்கலைக்கழகம், நடப்பாண்டுக்கான முதலீட்டாளர் தினத்தை முன்னிட்டு அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வினாடி வினாப்போட்டியை அண்மையில் நடத்தியது.

இதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களும் பங்குபற்றியிருந்தனர். இதில் முகாமைத்துவ வணிக பீடத்தின் நிதியியல் முகாமைத்துவத்துறை 3 ஆம் வருட மாணவர்கள் கலந்து கொண்டு இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். இந்தப் போட்டி 8 பல்கலைக்கழகங்களிலிருந்து பங்குபற்றிய 14 குழுக்களுக்கிடையே நடத்தப்பட்டது.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நிதியியல் முகாமைத்துவத் தலைவர் கலாநிதி சுப்ரமணியம் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ஐ)

### செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு



யாழ்ப்பாணம், கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். பாடசாலை அதிபர் திருமதி புஸ்பவதி சண்முகராஜா, யாழ்ப்பாண கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் சசிக்குமார், ஓய்வுபெற்ற கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் அருணாசலம் அகிலதாஸ், ஜே/124 கொக்குவில் கிராம அலுவலகர் செல்வி. தூரங்கனி ஜோசப் வின்சன் பிறிட்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ- 50)

## மெய்வன்மை போட்டிகள்

நெல்லியடி, மார்ச் 1

யாழ்ப்பாணம் பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் திருமதி சி. சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தனும், சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.ஆனந்தகுமாரும், மதிப்புறு விருந்தினராக அருட்தந்தை தி.இ.தேவராஜனும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-422)

## திருக்குறள் தேர்வு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கிடையே நடத்தும் திருக்குறள் தேர்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்வில் 800 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்றும் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம், கலைப்பீடம், முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் என்பவற்றின் பரீட்சை மண்டபங்களில் தேர்வுகள் இடம்பெறவுள்ளன என்றும் தமிழ்ச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

தேர்வில் வெற்றிபெறுவோருக்கான பரிசில்கள் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள திருவள்ளுவர் விழாவில் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மலசலகூடச் சீரமைப்புக்கு நிதி



கொடிகாமம், மார்ச் 1

போரால் இரண்டு கால்களையும், கணவனையும் இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு மலசல கூடத்தின் சீரமைப்பு வேலைகளுக்கு என ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

ஜேர்மனி ஸ்ருட்காட்டில் இயங்கும் உறவுகளுக்குக் கரம் கொடுப்போம் அமைப்பினால் இந்த உதவி அமைப்பின் அலுவலகத்தில் வைத்து கடந்த திங்கட் கிழமை வழங்கப்பட்டது.

தும்புத் தொழிற்சாலையில் வேலை செய்து 3 பிள்ளைகளையும் வளர்த்து வரும் பளையைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கே இந்த உதவியை மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஏ.சிவானந்தராசா வழங்கி வைத்தார். (ஐ-159)

## சிவராத்திரியை முன்னிட்டு மாபெரும் கலைச் சங்கமம்

சங்கானை, மார்ச் 1

சிவராத்திரியை முன்னிட்டு சங்கானை மக்கள் ஒன்றியத்தின் கலையகம் வழங்கும் மாபெரும் கலைச் சங்கமம் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மைதானத்தில் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் குமாரசுவாமி முருகானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் இ.சிறிதரன், யாழ்ப்பாணம் சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் ந.ரவிவண்ணன், யாழ்ப்பாணம் சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் மு.அசோக்குமார், யாழ்ப்பாணம் சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலையின் அதிபர் ம.முகுந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். சங்கானை கலைஞர்கள் இணைந்து வழங்கும் இயல் இசை நாடகம், பட்டிமன்றம் போன்ற பல்வேறு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-126)

## மணல் ஏற்றியோர் பொலிஸைக் கண்டதும் பதறியடித்து ஓட்டம்

சாவகச்சேரி, மார்ச் 1

பட்டப் பகலில் அனுமதிப் பத்திரமின்றி மணல் அகழ்ந்தவர்கள் பொலிஸாரைக் கண்டதும் வாகனத்தைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் கெற்பேலி பனங்காட்டுப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பதில் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் மணல் அகழ்வு இடம்பெற்ற இடத்துக்குச் சென்றபோது ஒரு உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்ட மணலைக் கொட்டிவிட்டு அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

மற்றஉழவு இயந்திரத்தில் மணல் ஏற்றியவர்கள் வாகனத்துடன் தப்பியோட முயற் சித்த போது பொலிஸார் விரைந்து செல்லவே வாகனத்தைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

வாகனத்தை மீட்ட பொலிஸார் இது சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (த-9)

## நூல் வெளியீடும் மதிப்பளிப்பும்

கொடிகாமம், மார்ச் 1

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு நூல் வெளியீடும், பெண் சாதனையாளர் மதிப்பளிப்பும் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு நடைபெறும்.

வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் வெளியிடும் நெடுந்தீவு முகிலன் எழுதிய "வெளியே புன்னகை அரசி உள்ளே கண்ணீருக்கு அடிமை" நூல் வெளியீடும், புனித திரேசாவின் பெண் சாதனையாளர்களும் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் புனித திரேசா பெண்கள் கல்லூரியின் பழைய மாணவருமான த.குருகுலராசா தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக பிரான்ஸ் கவிஞர் ஈழபாரதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-159)

# மோசடியை வெளிக்கொணர்ந்த பிரதி அதிபருக்கு இடமாற்றம்!

## பெற்றோர்கள் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், மார்ச் 1**

**யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றின் அதிபர் நிதி மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் நிலையில், அதிபரை இடமாற்றம் செய்யாது அதை வெளிக்கொணர்ந்த பிரதி அதிபருக்கு கட்டாய இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

இது குறித்து பாடசாலை மாணவர்களின் பெற்றோர் இலங்கை ஆசிரிய சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர். தாம் இதை வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: அதிபரின் மோசடிகளுக்கு பிரதி அதிபர் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளார். பிரதி அதிபர் தனது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுக்கிறார் என்று கூறி அதிபர் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிமனையில் முறையிட்டுள்ளார்.

பிரதி அதிபரிடம் வலயக்கல்விப்பணிமனையினர் விளக்கம் கோரியபோது அதிபரின் நிதி மோசடி உட்பட19 விதமான முறைகேடுகள் தொடர்பாக ஆதாரத்துடன் பிரதி அதிபர் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிமனையினருக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். மோசடிக்குத் துணைபோகாததாலேயே தன்மேல் அதிபர் குற்றம் சுமத்தியுள்ளார் என்றும் பிரதி அதிபர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் முறையற்ற விதமாக நிதி சேகரிப்பதைத் தடைசெய்யும் கல்வி அமைச்சின் 05/2005 இலக்க சுற்று நிருபத்தை மீறும் வகையில் அதிபர் செயற்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு தரம் ஒன்று மாணவர்களிடம் 15 ஆயிரம் ரூபா அதிபர் பெற்றிருந்த நிலையில் சிலருக்கு மட்டுமே பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இறுதி மதிப்பளிப்பின்போது ஒரு லட்சம் ரூபா பணம் சேர்த்து அதிபரிடம் வழங்கியுள்ளார்கள். இந்தப் பணம் இன்றுவரை பாடசாலை கணக்கில் வைப்பிலிடப்படவில்லை. தனியார் ஒருவர் பாடசாலைக்கு வழங்கிய மடிக்கணினி மற்றும் புறஜெக்டர் பொருள்கள் பதிவேட்டில் பதியப்படவில்லை. பற்றுச்சீட்டும் வழங்கப்படவில்லை.

2018ஆம் ஆண்டு நடன விழாவில் பங்குபற்றிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வைப்பிலிடப்படவில்லை என்று குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய அதிபரை பாடசாலையிலேயே தொடர்ந்தும் கடமையாற்ற அனுமதித்து பிரதி அதிபரை மட்டும் ஆரம்பக்கட்ட விசாரணைக்காக இடமாற்றம் செய்யும் செயற்பாடு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதி அதிபரை மட்டும் இடமாற்றுவதன் மூலமாக சாட்சியங்களையும், தடயங்களையும் அழிக்கக்கூடிய உதவியைப் புரிவதற்காகவே வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதோ என்று தாம் சந்தேகிக்கின்றோம்.

வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள் முறையீட்டாளர்களுக்குச் சாதகமாகச் செயற்படும் போக்கு மிகப்பெரிய முறைகேடு. இந்த முறைகேடுகள் தொடர்பாக - நீதியான விசாரணையை இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இது குறித்து பாடசாலை அதிபர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அழைப்பு எடுத்தபோதும் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. (த-105)

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

சாவகச்சேரி, மார்ச் 1

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில், விளையாட்டு உபகரணங்கள் தேவையாகவுள்ள பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆஸ்திரேலியா சிட்னிக் கிளை, கனடாக் கிளை உட்பட பல கிளைகளின் நிதிப் பங்களிப்புடன் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 151 பாடசாலைகளுக்குச் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் பாடசாலைகளின் அதிபர்கள் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களிடம் கையளிக்கப்பட்டன.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வழங்குநர்கள் சார்பில் சு.சுபதாசன், க. வரதராஜா தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், பாடசாலைகளின் அதிபர்கள், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினரால் மேடையில் வைத்து ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 9 பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் பாடசாலைகளின் அதிபர்கள், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன. ஏனைய பாடசாலைகளுக்குக் கல்லூரி மைதானத்தில் வைத்து கையளிக்கப்பட்டன. (ஒ,9)

# ஊழல் செய்திருந்தால் புலிகள் தண்டித்திருப்பர்

## வடக்கு அவைத் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளராக நான் பதவி வகித்தபோது இலஞ்ச ஊழல் செய்திருந்தால் என்னைத் தமிழீழ விடுதலைப்புலிகள் அன்றே கொன்றிருப்பார்கள். நான் எந்த மோசடியிலும் ஈடுபடாததால்தான் இன்றும் மக்கள் பிரதிநிதியாக உள்ளேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த 24 ஆம் திகதி மாநகர சபை அமர்வின்போது நியமனம் பட்டியல் மாநகர சபை உறுப்பினர்களான சட்டத் தரணி மு.றெமிடியஸ் மற்றும் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் எனக்கு எதிராக சில அபாண்டமான குற்றச் சாட்டுகளை முன்வைத்துச் சபையை தவறாக வழிநடத்தியிருந்தனர்.

இவ்வாறு குற்றச்சாட்டு முன்வைக்கும் போது றெமிடியஸ் "நான் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தால் தான் அதனைச் சந்திக்கத் தயார்" என்று கூறினார். என்னைப் பொறுத்தவரை அவருக்கு எதிராக ஒரு நீதிமன்றத் தீர்ப்பைநான் எதிர்பார்க்கவில்லை. என்னுடைய விடயத்திலான தீர்ப்பாளர்கள் மாநகர மக்களும் ஏனைய பொதுமக்களுமே.

இவரது குற்றச்சாட்டில் புஸ்பலதா என்பவரை நான் நியமித்தேன் என்றும், அவர் மூலமாக சில ஆவணங்களை மறைத்தேன் என்றும் கூறுகிறார். நான் 1989 ஆம் ஆண்டிலேயே சேவையிலிருந்து ஓய்வுபெற்றது பற்றி இந்த நாடே அறியும். அவ்வாறு இருக்கையில் இவர் குறிப்பிடும் செல்வி பி.புஸ்பலதா என்பவர் 19.03.1999 ஆம் திகதியே நியமனம் பெற்றுள்ளார். நான் ஓய்வுபெற்று 10 வருடங்களுக்குப் பின்பு நியமனம் பெற்றுள்ள ஒருவரை நான் நியமித்ததாகவும், ஆவணங்களை அவர் மூலமாக மறைத்ததாகவும் கூறுவது அபாண்டமான பொய்யாகும். இந்தத் தகவலை மாநகர ஆணையாளரிடமிருந்து எவரும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இவர்களது கட்சியின் பரிந்துரையின் பேரிலேயே மாநகர பிரதேசத்துக்கு வெளியே வசித்த இவர் நியமனம் பெற்றதாக ஒரு தகவல் உண்டு.

என்னைப் பொறுத்தவரையில் நான் 1988/89 காலப்பகுதியில் திடீரென சேவையில் இருந்து நீங்கினேன். அதேபோல 2006 ஆம் ஆண்டிலும் ஒகஸ்ட் மாதம் அளவில் திடீரென ஏற்பட்ட சிறுநீரகப் பாதிப்பு காரணமாக சத்திர சிகிச்சைக்குட்பட்டு, வைத்தியசாலையில் இருக்கும் பொழுது என்னைப் பதவி நீக்கவேண்டும் என்று சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அரசுக்கு முறையிட்டதைத் தொடர்ந்து மாநகர அலுவலகத்துக்குச் செல்லாமலேயே நான் பதவி நீங்கினேன். என்னுடைய சேவைக் காலத்தில் எந்தவொரு ஆவணத்தையும் நானோ வேறு நபர்கள் மூலமாகவோ மறைக்க வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. ஆகவே இவர்களுடைய வாதமே பொய்யான அடிப்படையில் முன்வைக்கப்பட்டது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. இவர்களுக்குரிய பெரிய பிரச்சினையே கஸ்தூரியார் வீதியில் ஏற்கனவே அமைந்துள்ள ஆறு கடைகள் சம்பந்தமானது. இது சம்பந்தமாக இவர்கள் காலத்துக்குக் காலம் என் மீது குற்றம் சாட்டி வருவதும் நான் பதிலளித்து வருவதுமாக இருந்துள்ளது. மாநகர சபையின் முதல் அமர்விலேயே இக்கடைகள் எனது தலைமையில் கட்டப்பட்டன என்று பொய் கூறினார். இதற்கு . பதிலளித்து முதல்வருக்குக் கடிதம் எழுதினேன்.

கஸ்தூரியார் வீதிக்கு கிழக்குப் பக்கமாக உள்ள வண்ணான் குளத்துக்கு இடையில் உள்ள மாநகர சபைக் காணியை 1970களின் முற்பகுதியில் அப்போதைய முதல்வர் அல்பிரட் துரையப்பா அவர்கள் இந்தக் கடைகளை அமைத்தவர்களுக்கு வழங்கியிருந்தார். அவ்வாறு காணியைப் பெற்றுக் கொண்டவர்கள் தங்களது செலவில் கடைகளை அமைத்து உப வாடகைக்கு வழங்கி கணிசமான வருமானத்தைத் தாம் பெற்றுக் கொண்டு சபைக்கு நில வாடகையாக சிறு தொகையை செலுத்தி வந்தனர். துரையப்பாவின் இறப்புக்கு பின்பு 1975 இல் நான் ஆணையாளராக நியமிக்கப்பட்டேன். அதிலிருந்து நான் சேவையிலிருந்து நீங்கும் வரையான காலம் ஒரு இக்கட்டான நெருக்கடியான காலமாகும். இந்த நிலக் குத்தகை என்பது மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 40 (1) (f) (i) இற்கு முரணானது. இந்த சட்ட ஏற்பாட்டின் படி மாநரக சபைக்கு உரித்தாக்கப்பட்ட எந்த காணியையும் அமைச்சர் மற்றும் அரச தலைவர் அங்கீகாரம் இன்றி குத்தகைக்கு வழங்கமுடியாது.

இந்தக் கட்டட அமைப்புக்கான விண்ணப்பங்களை கோருகின்ற போது தனி ஒருவர் மட்டும் விண்ணப்பித்தால் மீள் விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும் என்ற வாதம் சபையில் முன்வைக்கப்பட்ட போது தாங்கள் ஏதோ பெரிய தமிழ் தேசிய வாதிகள் போன்றுகாட்டிதமிழருக்கு கொடுப்பதே தமது கொள்கையாகும் என்று உரத்துக் கூறினர். இது ஒரு வேடிக்கையான கூற்று. இவர்கள் வெளியிட்ட விளம்பரங்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில்தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் மட்டுமே வெளியிடப்பட்டன.

தமிழருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றால் ஏன் சிங்களப் பத்திரிகையில் வெளியிட வேண்டும்? மேலும் இந்தத் தகவல் ஏன் உள்ளூர் பத்திரிகையில் வெளியிடவில்லை? என்ற கேள்வியும் எழுகின்றது. காலத்துக்குக் காலம் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தமது பல்வேறு மோசடிகளையும் ஊழல்களையும் மறைப்பதற்கே என் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சாட்டி வருவதும் அனைவருக்கும் தெரிந்ததே. றெமிடியசும் அதற்கு வக்காலத்து வாங்குவது வழக்கமானதே. எமது இந்தத் தெளிவுபடுத்தல் மூலம் மக்கள் உண்மை நிலையைத் தெரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன்- என்றார். (எ-8)

# பொம்மைவெளி வீதியால் பயணிப்பது பெரும் சிரமம்

## நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் இருந்து பொம்மைவெளி வரையான வீதியில் பயணிப்பது பெரும் சிரமமாக உள்ளது என்று பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஓட்டுமடம் சந்தியில் இருந்து 174, 785இலக்கப் பேருந்துகள் பயணிக்கும் பொம்மைவெளிப் பகுதியில் வாகன நெரிசல் காணப்படுகின்றது. அந்த வீதியின் இருபுறமும் தனியார் வாகனங்கள் தரித்து நிறுத்தப்படு கின்றன. அங்குள்ள குடியிருப்புக்களைச் சேர்ந்தவர்களும், சிறுவர்களும் வீதியின் குறுக்காக நடமாடுகின்றனர். அதனால் வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பயணிகள் கூறுகின்றனர்.

இரவு 9 மணிக்கும் கூட இந்த நிலைமையே காணப்படுகின்றது. போக்குவரத்துப் பொலிஸார் அந்த வீதியில் நின்று வாகனங்களை மறித்துச் சோதனையிடுகின்றனர்.

ஆனால் அவர்கள் போக்குவரத்து நெரிசல் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அந்த வீதியால் நோயாளர்காவு வண்டி வந்தால் கூட விரைந்து பயணிக்க முடியாத நிலமையே காணப்படுகின்றது என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி அகலம் குறைந்த வீதியாகும். வீதியின் இருமருங்கிலும் தனியார் வாகனங்கள் தரித்து விடப்படுகின்றன. வீதியில் பயணிக்கும் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திச் செல்ல முடியாத நிலமை காணப்படுகின்றது. இந்த விடயத்தில் கவனம் செலுத்திப் போக்குவரத்துப் பொலிஸார் இலகுவான போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்த வேண்டும் என்று அந்த வீதியால் பயணிக்கும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-21)

## மருத்துவமனையில் துப்புரவு



சாவகச்சேரி, மார்ச் 1

கொடிகாமம் ( மிருசுவில் ) பிரதேச மருத்துவமனை வளாகத்தில் நேற்று படையினரும் மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் கடமையாற்றுவதால் இரவு - பகல் சேவை மக்களுக்கு கிடைத்து வருகின்றது. தென்மராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள படையினரும் இந்த மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட துப்புரவுப் பணியில் பெருமளவு படையினரும் கலந்து கொண்டு மருத்துவமனை வளாகப் பகுதியை துப்பரவு செய்தனர். (எ-9)

பல்கலை மாணவர் மீது சூடு

## துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது பயத்தால் வெளியே வரவில்லை

### நீதிமன்றில் சாட்சி சாட்சியமளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

3 தடவைகள் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. வாகனச் சத்தங்களும் கேட்டன.

நள்ளிரவு என்பதால் வீட்டுக்கு வெளியே செல்ல அச்சம் ஏற்பட்டது. என்ன நடந்தது என்று தெரியவில்லை என்று பல்கலை மாணவர் கொலை வழக்கில் சாட்சிகளான பெண்கள் இருவர் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சுலக்சன், கஜன் ஆகியோர் கொக்குவில் குளப்பிட்டியில் 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி இரவு துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணப் பொலிஸார் மீது கொலைக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை யாழ்ப்பாண நீதிவான் மன்றில் இடம்பெற்று வருகிறது. வழக்கில் உள்ள சாட்சிகளில், சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அண்மையாக உள்ள வீட்டில் வசிப்பவர்கள் 5 பேர் நேற்றுமுன்தினம் சாட்சியப் பதிவுக்காக நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஒருவர் "தனக்குச் சத்தம் கேட்கவில்லை. காலையில் குற்றப் பகுதி என்று மஞ்சள் வர்ண பட்டி கட்டியிருந்தனர். அதன் பின்னர்தான் தெரியும்" - என்றார்.

மற்றும் இருவரின் சாட்சியங்களும் முன்னர் சாட்சியமளித் இரண்டு பெண்களினது போன்றே உள்ளது என்று அரச சட்டவாதி மன்றில் கூறி அவர்களின் சாட்சியம் தேவையில்லை - என்றார். நீதிமன்று அதை ஏற்றுக்கொண்டது. வழக்கு எதிர்வரும் ஏப்ரல் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரனும் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி மு.றெமி டியஸ்ஸும் முற்பட்டனர்.

**பின்னணி**

கொலைக் குற்றச்சாட்டில், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் தமிழ் பொலிஸ் அலுவலர் உட்பட 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

11மாதங்கள் விளக்கமறியலின் பின்னர் யாழ்ப்பாண மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பொலிஸ் சேவையில் மீள இணைக்கப்பட்டனர்.

இரண்டாவது சந்தேகநபர் ஏக்கநாயக்க முதியான்சலாகே ஜயவர்த்தன, நான்காவது சந்தேகநபர் தங்கராஜன் லங்காமனன், ஐந்தாவது சந்தேகநபர் கமல விதானகே நவரத்ன பண்டார ஆகியோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு அரச சாட்சிகளாக மாற்றப்பட்டனர்.

கடமைக்குப் பொறுப்பாகவிருந்தவரான முதலாவது சந்தேகநபர் சரத் பண்டார திசா நாயக்க மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியவரான மூன்றாவது சந்தேகநபர் சமர ஆராய்சிலாகே சந்தன குமார சமர ஆராச்சி ஆகிய இருவருக்கும் எதிராக இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் 296ஆம் பிரிவின் கீழான கொலைக் குற்றச்சாட்டின் கீழ் குற்றப்பத்திரத்தைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த 5ஆம் திகதி சுருக்க முறையற்ற விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

நான்கு பேர் சாட்சியமளித்திருந்தனர். வழக்கிலுள்ள 42 சாட்சிகளில் இதுவரை சுமார் 8 சாட்சிகள் சாட்சியமளித்துள்ளனர். (கு-8)



## பூட்டோவின் தந்தைக்கு வாழ்வாதார உதவிகள்

வடமராட்சி, மார்ச் 1

கரும்புலி மாவீரன் லெப்டினண்கேணல் பூட்டோவின் தந்தைக்கு வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

காலையடி இணைய உதவும் கரங்களால் கடந்த டிசம்பர் மாதம் ஒரு தொகை உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. தொழில் செய்து வாழ விரும்புகின்றேன் என்றும், தனக்கு தெரிந்த தொழிலான வெல்டிங் தொழிலை செய்ய உபகரணங்களை தந்துதவ வேண்டும் என்றும் பூட்டோவின் தந்தை கோரியிருந்தார். அதற்கமைய புலம்பெயர்நாட்டில் வாழும் இராசையா சிவபாதம் குடும்பத்தால் வழங்கப்பட்ட நிதி உதவியூடாக இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சிவநாதன் நவீந்திரா வேந்தன் நேரில் சென்று பொருள்களை வழங்கிவைத்தார். (ஜ-26)

## விபத்து ஏற்படுத்தினாரென சாரதிக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, மார்ச் 1

வீதியால் சென்ற உந்துருளியை மோதிவிட்டுத் தப்பியோடினார் என்ற குற்றச்சாட்டில் பட்டா ரக வாகனச் சாரதியைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கடந்த 25ஆம் திகதி இரவு சாவகச்சேரிக்குச் சென்றுவிட்டு ஏ -9 முதன்மைச் சாலையில் யாழ்ப்பாணம் திரும்பிய உந்துருளியை கைதடி நுணாவில் பகுதியில் ஒழுங்கையொன்றிலிருந்து முதன்மை வீதிக்கு வந்த பட்டா ரக வாகனம் மோதி 75 மீற்றர் தூரம் வரை இழுத்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

பட்டா ரக வாகனம் சாரதி - காயமடைந்த தம்பதியை அவ்விடத்தில் விட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த தெய்வேந்திரம் சத்தியமோகன் (வயது -39), அவரது மனைவியான சத்தியமோகன் சிந்துஜா( வயது 36 ) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கைதடி நுணாவில் ரயர் கொம்பனிக்கு அருகில் உள்ள காணியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தைக் கைப்பற்றியதுடன் அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பவரையும் கைது செய்தனர்.

இந்த நபரை மறுநாள் 26 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதியை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஜ-9)



## தண்ணீர் பவுசர் கையளிப்பு

வடமராட்சி, மார்ச்1

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் வடமராட்சி பிரதேச செயலகத்துக்கு புதிய தண்ணீர் பவுசர் ஒன்று நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. வடமராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம மக்களுக்கு இதுவரை உழவு இயந்திரத்தில் பொருத்தப்பட்ட சிறிய பவுசரைக் கொண்டே தண்ணீர் தேவை நிறைவு செய்யப்பட்டது. இப்போது வழங்கப்பட்ட பவுசரைக் கொண்டு மக்களின் தண்ணீர் தேவையை நிவர்த்தி செய்ய முடியுமென மருதங்கேணி பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (ஜ-70)

## கற்றல் வள நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ஆரம்ப கற்றல் வளநிலையம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொள்ளவுள்ளார்.

அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் இந்த கற்றல் வள நிலையம் அமைக்கப்பட்டது. (ஐ)



## கேதீஸ்வரம் சிவராத்திரிக்கு 4 லட்சம் பக்தர்கள் எதிர்பார்ப்பு

மன்னார், மார்ச் 1

இந்த ஆண்டு திருக்கேதீஸ்வரம் சிவராத்திரி திருவிழாவுக்கு 4 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆலய வளாகத்தில் பொலித்தீன் பாவனை, புகையிலை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் நான்காம் திகதி திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறவுள்ள சிவராத்திரி விழா தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் திருக்கேதீஸ்வரம் சம்பந்தர் மடத்தில் நேற்றுக் காலை பத்து மணிக்கு ஆரம்பமானது

அதில் இதில் பாதுகாப்பு சுகாதாரம் போக்குவரத்து குடிநீர் போன்ற முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டு உரியவர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. பாதுகாப்புக்காக ஐந்நூறு பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஐந்நூறு சாரணர்களும் கோரப்பட்டுள்ளது

ஆலய வலாகத்தில் 130 மலசலக் கூடங்களே உள்ளன. மேலதிக மலசலக்கூடங்கள் தேவை என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது மன்னார் மாவட்டத்தில் தீயணைப்பு படை இல்லை. தற்காலிகமாக சேவை மனப்பான்மையுடன் வவுனியாவில் இருந்து கட்டணம் இல்லாமல் தீயணைப்புப் படையைக் கொண்டுவருவது தொடர்பாக ஆலோசிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

போக்கு வரத்துக்கென இலங்கை போக்குவரத்துச் சபையின் 80 பேருந்துகளையும், தனியார் பேருந்துகளில் 87 பேருந்துகளையும் சேவையில் ஈடுபடுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மீளாய்வுக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன், திருக்கேதீஸ்வரம் ஆலய சபை செயலாளர் பொறியயலாளர் இரமகிருஷ்ணன், மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், மன்னார் பிரதேச சபை தலைவர் முஜாஹிர், மடு பிரதேச செயலாளர் பி.ஜெயகரன், மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி, திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபையினர், பொலிஸ், இராணுவ அதிகாரிகள் மற்றும் அனைத்து திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.

(எ-213)

# பூந்தோட்டம் முதன்மை வீதி பயணிக்க முடியாத நிலையில்

## திருத்தியமைக்குமாறு கோரிக்கை



**வவுனியா,மார்ச் 1**

**வவுனியாநகரிலிருந்துபூந்தோட்டம்உட்பட பலகிராமங்களிற்கு செல்லும் முதன்மைத் தார் வீதியில் ஆங்காங்கே குழிகள் ஏற்பட்டுக் காணப்படுவதால் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் காணப்படும் இரண்டு கிலோமீற்றர் நீளம் கொண்ட குறித்த வீதியில் பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் தினமும் பயணிக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த தார்வீதியானது ஆங்காங்கே உடைந்து குழிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்து மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதுடன் விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

குறித்த வீதி விரைவில் நிரந்தரமாகக் காப்பற் இட்டு அகலமாக்கபட்டு சீரமைக்கப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாக இருப்பதுடன் தற்காலிகமாகவேனும் குழிகள் ஏற்பட்ட பகுதிகளையாவது சீரமைக்கவேண்டும் என்றுகோரிக்கை முன்வைக்கின்றனர்.

இது தொடர்பில் வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறியியலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது வீதி முற்றாகக் காப்பட் இடப்பட்டு திருத்தப்படுவதற்கான திட்டமுன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளது. வேலை ஆரம்பிக்கும் பணிகள் இவ்வருடத்துக்குள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். எனினும் தற்போது குழிகள் ஏற்பட்டுள்ள பகுதியைத் தற்காலிக்மாக சீரமைப்பது தொடர்பாக கவனம் செலுத்துவதாக தெரிவித்தார்.

(ஜ-110)

## நெல் அறுவடை நிகழ்வை மஸ்தான் எம்.பி ஆரம்பித்து வைத்தார்

வவுனியா, மார்ச் 1

வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கன்னாதிட்டி கணேசபுரம் பகுதியில் நவீன நெல் விதைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி விதைக்கப்பட்ட வேளாண்மையை அறுவடை செய்யும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், காதர் மஸ்தான் இயந்திரத்தை இயக்கி வைபவரீதியாக அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலர் எஸ்.சிவகரன், வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் சக்கிலா பானு உள்ளிட்ட அதிகாரிகளுடன், விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(கு-110)

## மன்னார், சிலாவத்துறை காணி மீட்புப் போராட்டத்தில் மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்

மன்னார், மார்ச் 1

மன்னார் சிலாவத்துறையில் தமது காணிகளை விடுவிக்குமாறு கடற்படையினருக்கு எதிராகக் கடந்த எட்டு நாள்களாக மக்கள் போராடி வருகின்றார்கள். அவர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் சிலாவத்துறை மக்களுடன் இணைந்து போராட்டம் நடத்தியுள்ளது.

போராட்டத்தில் கலந்து கொண்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர் கருத்துத் தெரிவித்ததாவது:

இலங்கையில் 17 மாவட்டங்களை இணைத்து எமது செயற்பாடுகளை நகர்த்திக் கொண்டிருக்கிறோம். ஒட்டுமொத்தமாக மனித உரிமைச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்ற அரச சார்பற்ற நிறுவனம் என்ற வகையில், மக்களுடைய காணிகள் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றோம். அதேவேளை இலங்கையில் போர் நடைபெற்ற காலத்திலிருந்து இன்று வரை மக்களுடைய காணிகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. அவை முழுமையாக விடுவிக்கப்படவில்லை. நாம் மக்களுடன் இணைந்து பல தடவை போராட்டங்களை நடத்தி பல கோரிக்கைகளை முன்வைத்தபோதும் இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. ஆகவே நாங்கள் ஐந்து நாள் தொடர் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். முதலாவதாக முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இதேபோன்று கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் நடைபெறும்.

வவுனியாவில் போராட்டம் நடத்தி பின்னர் கொழும்பைச் சென்றடைந்து எமது கோரிக்கையை அரசுக்குத் தெரிவிக்கவுள்ளோம். ஐ.நா கூட்டத்தொடருக்கும் எமது பிரதிநிதியை அனுப்புவதற்காகவே தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறோம் என்று தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர் தெரிவித்தனர்.

(கு-213)



# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பெரும் போராட்டம்



மன்னார்,மார்ச்1

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மன்னாரில் போராட்டம் ஒன்றை நேற்று வியாழக்கிழமை முன்னெடுத்ததோடு,தமது கோரிக்கை அடங்கிய மனுவை ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பியுள்ளனர்.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவி மனுவல் உதையச்சந்திரா தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் காலை 10 மணியளவில் ஊர்வலம் ஆரம்பமாகி மன்னார் மனித புதை குழி அகழ்வு பணிகள் இடம் பெறும் பகுதியைச் சென்றடைந்து பல்வேறு கோசங்களை எழுப்பினர். அதனைத் தொடர்ந்து குறித்த ஊர்வலம் மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக சென்று மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கின்ற இச் சூழலில் மேலும் இலங்கை அரசுக்கு கால அவகாசம் கொடுக்க வேண்டாம், இலங்கைஅரசைநீதிப்பொறிமுறையில் இருந்து தப்பிக்க விடக் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்,மன்னார் மனித புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் யார்,புதைத்தவர்கள் யார், உள்ளிட்ட பல்வேறு விடையங்களை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்,மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ்,மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.விசாகரன், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள்,மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள்,தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதி நிதிகள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்துக்கு எழுதப்பட்ட மனு வாசிக்கப்பட்டு மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலம் குரூஸிடம் கையளிக்கப்பட்டது.

(ஜ-56)

## வவுனியாவில் தொடரும்

# பேருந்து நிலையப் பிரச்சினைக்கு கருத்துக்கணிப்பு நடத்தியே முடிவு

### வடக்கு ஆளுநர் திட்டவட்டம்



வவுனியா, மார்ச் 1

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் பேருந்துச் சேவைகள் இடம்பெறுவது தொடர்பில் மக்களிடையே கருத்துக் கணிப்புக்களைச் செய்ததன் பின்னரே முடிவு செய்யப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மக்களின் தேவைகளை ஆராய்ந்து அதை முழுமைப்படுத்தும் நோக்குடன்நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண ஆளுநருக்கும், வவுனியா பொது அமைப்புகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் வவுனியா நகர சபை மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

அதில் பேருந்து நிலையம் தொடர்பாகவும் பேசப்பட்டது. அதன்போதே வடக்கு ஆளுநர் இவ்வாறு கூறியுள்ளார்.

பழைய பேருந்து நிலையத்தின் தற்போதைய நிலமைகள் செயற்பாடுகள் குறித்து வவுனியா வர்த்தக சங்கப் பிரதிநிதிகளால் ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கு பதிலளித்த வடக்கு மாகாண ஆளுநர் வவுனியா மக்களிடையே பழைய பேருந்து நிலையப் பாவனை தொடர்பான கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் சிறந்த தீர்வை ஒரு மாதத்துக்குள் பெற்றுத் தருவேன் என்று கூறினாரெனத் தெரிவிக்கப்பட்டது.

195 மில்லியன் ரூபா செலவில் வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது. புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துச் சேவைகளை ஆரம்பிப்பதில் சிக்கல்கள் தோன்றியிருந்தன. ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், கவனவீர்ப்புகள் என பல நடத்தப்பட்டன. பின்னர் ஒருவாறு அந்தப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துச் சேவைகள் அனைத்தும் ஆரம்பித்ததன் பின்னர் பழைய பேருந்து நிலையம் வெறிச்சோடியது.

அதனால் அதை அண்டியுள்ள வர்த்தகர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். பலர் கடைகளை மூடும் சூழலும் ஏற்பட்டது. சிலர் கடைகளைப் பூட்டிவிட்டு தலைமறைவாகினர். உள்ளூர் பேருந்துச் சேவைகளையாவது பழைய பேருந்து நிலையத்தில் இடம்பெறவேண்டும் என்று வர்தகர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். அது தொடர்பில் பல மட்டப் பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இந்ந நிலையில் தற்போது கருத்துக் கணிப்பு நடத்தி முடிவு எடுக்கப்படும் என்று வடக்கு ஆளுநர் தெரிவித்துள்ளார். (எ-21)

## புதூரில் கைத்துப்பாக்கி மீட்பு: பெண் உட்பட இருவர் கைது

வவுனியா, மார்ச் 1



வவுனியா, புளியங்குளத்தில் கடந்த ஜனவரி மாதம் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 5 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி, வவுனியா புளியங்குளத்தில் உள்ள புதூர் பகுதியில் கைத்துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன. அவற்றை வீசிச் சென்றவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளைப் பொலிஸாரும், இராணுவத்தினரும் மேற்கொண்டனர். அங்கு சுற்றிவளைத்துத் தேடுதலும் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் வவுனியா செட்டிக்குளத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரும், இரணை இலுப்பைக்குளத்தைச் சேர்ந்த 26 வயதுடைய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-110)



## மோட்டார் குண்டு மீட்பு

வவுனியா, மார்ச் 1

வவுனியா பட்டாணிசூர் பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த 60 ரக மோட்டார் குண்டு ஒன்றைச் சிறப்பு அதிரடிப் படையினர் நேற்று மீட்டுள்ளனர்.

பட்டாணிசூர் பகுதியில் உள்ள வர்த்தகநிலையம் ஒன்றுக்கு முன்பாக கொட்டப்பட்டிருந்த மண்குவியலில் சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் இருப்பதை அந்தப் பகுதியில் நின்றிருந்தவர்கள் அவதானித்ததுடன். இவ்விடயம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் மோட்டார் குண்டை அவதானித்ததுடன் சிறப்பு அதிரடிப் படையினருக்கும் தகவல் தெரிவித்தனர். கடந்த சில நாள்களுக்கு முன்பாக ஓமந்தை பகுதியில் இருந்து குறித்த கிரவல்மண் கொண்டுவரப்பட்டு வீதியில் பறிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் நீதிமன்ற அனுமதியின் பின்னர் குறித்த மோட்டார் குண்டினை அப்பகுதியில் இருந்து அகற்றவுள்ளதாகத் தெரிவித்தனர். (ஜ-110)



## கட்டடத் திறப்பு விழா

முல்லைத்தீவு, மார்ச் 1

ஒட்டுசுட்டான் கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் இன்று வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது என்று பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலர் த.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் சிறப்புவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா கலந்துகொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-500)

## மானிப்பாயில் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவரென

### சந்தேக நபரொருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1

மானிப்பாய் பகுதியில் வீடொன்றின் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் 23 வயதுடைய இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

'யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து வாளொன்று மீட்கப்பட்டது. நவாலிப் பகுதியில் சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்துக்குப் பழிவாங்கும் நோக்குடன் இந்தச் சம்பவத்தை தான் மேற்கொண்டார் என்று சந்தேக நபர் தெரிவித்தார். ஏனையவர்களைக் கைது செய்ய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன' என்று மானிப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தார்.

நான்கு நாள்களுக்கு முன்னர் மானிப்பாய் கல்லூரி வீதியில் உள்ள வீடொன்றின் மீது ஐந்து பேர் கொண்ட குழுவொன்று தாக்குதல் நடத்தியது. வாள் கோடரியுடன் வந்த குழுவினர் வீட்டில் நின்ற மூன்று உந்துருளிகளை எரித்துவிட்டுத் தப்பிச் சென்றது. இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்திலேயே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-26)

## செம்மலையில் வாள்வெட்டு

முல்லைத்தீவு, மார்ச் 1

முல்லைத்தீவு செம்மலை அளம்பிலில் 42 வயதுடையவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை உந்துருளியில் வந்தவர்களே வாளால் வெட்டினர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் வலது கையில் காயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (து-ரி3)



## உதவிப் பொருள் கையளிப்பு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சின்னச்சாளம்பன், ஒட்டுசுட்டான் கிராமங்களைச்சேர்ந்த 35 குடும்பங்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன. வவுனியா சிறைச்சாலைக் கைதிகளால் முன்னெடுக்கப்பட்ட இருநாள்கள் உணவுத் தவிர்ப்பால் கிடைக்கப்பெற்ற நிதி மூலம் சேகரிக்கப்பட்ட பொருள்களே வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை சிறைச்சாலைகள் அத்தியட்சகரால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. (ஜ-500)

## விழிப்புணர்வு கருத்தரங்கும் கண்காட்சியும்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் "ஏற்றுமதியில் முதலிடத்தை பெறுங்கள்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு கருத்தரங்கும், தொழில்நுட்ப கண்காட்சியும் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடை பெறும். 2022 ஆம் ஆண்டளவில் இலங்கையின் ஏற்றுமதி வருவாயை 28 பில்லியன் டொலர்களாக அதிகரித்தல், புதிய ஏற்றுமதியாளர்கள் இரண்டாயிரம் பேரை நியமித்தலை நோக்கமாக் கொண்டு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-110)

# தெற்கைப் பற்றி கூட்டமைப்பு ஒருபோதுமே சிந்திப்பதில்லை

## குற்றஞ்சாட்டுகிறார் ஹெகலிய எம்.பி.



கொழும்பு, மார்ச் 1

தெற்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து கூட்டமைப்புக்கு அக்கறையில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்த தீர்வுக்கு எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. இது தமிழர்களின் விடயத்தில் அக்கறையில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

இந்த நிலையில் அவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளை வைத்துக் கொண்டே வடக்கில் அரசியல் செய்கின்றார்கள். அவர்கள் ஒருபோதும் தமிழ் மக்களைக் குறித்துச் சிந்திக்கப் போவதில்லை.

அதைப் போன்று தெற்கு மக்களைக் குறித்து அவர்கள் எந்த வழியிலும் சிந்திக்கப்போவதில்லை. இது எதிர்க் கட்சித் தலைவராகக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இருந்தபோது தெளிவாகத் தெரிந்தது - என்றார். (த)

# அலுகோசு பதவிக்கு 45 பேர் விண்ணப்பம்

## ஒருவர் வெளிநாட்டவர்



கொழும்பு, மார்ச் 1

தூக்குத் தண்டனை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கு இதுவரை 45 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று அரசதலைவர் கூறியிருந்தார். அதையடுத்து சிறைச்சாலைகள் திணைக்களம் அலுகோசு பதவிக்கு விண்ணப்பம் கோரியிருந்தது. அதற்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை என்றும் பன்னாடு ஒன்றைச் சேர்ந்த ஒருவர் விண்ணப்பித்துள்ளார் என்று கூறப்பட்ட நிலையில் அதற்கான விண்ணப்ப திகதியும் நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில் அலுகோசு பதவிக்கு இதுவரை 45 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# நாட்டில் எவருக்கும் பிரச்சினைகள் எதுவுமில்லை

## விமலதம்ம தேரர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 1

நாட்டிலுள்ள சமூகங்கள் அனைத்தும் பரஸ்பர தோழமையுடன் எந்த வித பிரச்சினையுமின்றி இருக்கின்றன என்று மல்வத்து மகா விகாரை பிரிவின் அநுநாயக்கர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார். இலங்கையுடனான பரஸ்பர புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளும் நோக்குடன் மியன்மார் ஊடகவியலாளர்கள் குழாம் இலங்கைக்குப் பயணம் செய்திருந்தது.


அந்தக் குழுவினர் மல்வத்து மகா விகாரை பிரவின் அநுநாயக்கரை நேற்றுமுன்தினம் சந்தித்து ஆசி பெற்றனர். கலந்துரையாடலொன்றையும் மேற்கொண்டனர். இதன்போதே அநுநாயக்கர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலப் போரில் இராணுவத்தினர், பொதுமக்கள் என இரு தரப்பிலும் உயிரிழப்புகள் இடம்பெற்றன. சிலர் கூறுவது போன்று நாட்டிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கு இடையே எவ்வித பிரச்சினை யும் இல்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து இனத்தவரும் இங்கு ஒத்துழைப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால், சில இடங்களில் இடம்பெறும் சிறு சிறு இனவாத செயல்கள் முழு நாட்டுக்கும் அவப்பெயரை விளைவிப்பனவாக அமைந்துள்ளன. பன்னாடுகளிடம் யார் என்ன கூறினாலும் நாட்டில் அனைத்துச் சமூகங்களும் பரஸ்பர தோழமையுடனேயே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார். (த)

# கருத்துக்கள் கூறும்போது பொறுப்புடன் இருங்கள்!

## ரணில் 'அட்வைஸ்'



கொழும்பு, மார்ச் 1

அமைச்சர்கள், இராஜாங்க, பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கருத்துக்களைக் கூறும்போது பொறுப்புடன் இருக்க வேண்டும் என்று தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொக்கெய்ன் பயன்படுத்துகின்றனர் என்று நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்த கருத்துகள் தொடர்பில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

ஏனைய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்பில் செயற்படுவதற்கு தனக்கு அதிகாரமில்லையெனத் தெரிவித்த விக்கிரமசிங்க, தேவையேற்படின் இரகசியப் பொலிஸாரின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அரசு என்ற வகையில் செயற்பட முடியுமெனத் தெரிவித்துள்ளார்.

செயற்குழுவில் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுக் கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, "தனக்கு 7 இலட்சம் விருப்பத்தைக் கொண்டிருப்போர், தன்னுடைய முகப்புத்தக்கத்தில் உள்ளனர். எனவே, தான் தெரிவித்திருக்கும் கருத்துகள் தொடர்பில், பிரபல்யமான அரசியல் என்ற வகையில் கவனஞ் செலுத்துங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

தலைமைஅமைச்சர் மட்டுமன்றி, ஏனைய மூத்த உறுப்பினர்களும் கருத்துக்களைக்கூறும்போது பொறுப்புடன் கூறுவது தொடர்பிலான கருத்துகளை முன்வைத்தனர். இந்தநிலையில் உணர்ச்சிவசப்பட்டுக் கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க செயற்குழுக் கூட்டத்திலிருந்து உடனடியாக வெளியேறுவதற்கு முயற்சித்தாரென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# இரகசியங்களைக் கசிய் விட்ட அதிகாரிகள் மீது விசாரணை!

## குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்தது

கொழும்பு, மார்ச் 1

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்யலங்கார உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் சிலருக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் சிலர், சந்தேக நபர்களுக்கு இரகசியங்களை வெளியிட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சிலர் அண்மையில் திடீரென வசதி படைத்தவர்களாக மாறியுள்ளனர் என்பது குறித்தும் விசாரிக்கப்படவுள்ளது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்யலங்கார மற்றும் அவருக்கு நெருக்கமான அதிகாரிகளை விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைத்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தரவின் உத்தரவில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த மூத்த பிரதிப்பொலிஸ் மா அதிபர் ரவி வைத்யலங்காரவை அந்தப் பதவியில் இருந்து நீக்க கடந்த செவ்வாயன்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மிக் போர் வானூர்திக் கொள்வனவு தொடர்பான விசாரணைகள் குறித்த இரகசியங்களை சிங்கப்பூரைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களுக்கு வெளியிட்டார் என்று அவர் மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 16ஆம் திகதி வைத்யாலங்கார திடீரென்று சிங்கப்பூருக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டதையடுத்தே இந்தத் தொடர்புகள் அம்பலமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

# ரூ.120 மில்லியன் பெறுமதியான ஹெரோய்னுடன் ஒருவர் கைது



கொழும்பு, மார்ச் 1

குளியாப்பிட்டி - கும்புராபொல பகுதியில் 120 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகத்தில் 27 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, உந்துருளியில் பயணித்த ஒருவர் மடக்கப் பட்டார்.

27 வயதுடைய அவரிடமிருந்து ஒரு கிலோக்கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அதன்பின்னர் அவரது வீட்டுக்குச் சென்று மறைத்துவைக் கப்பட்டிருந்த 9 கிலோக்கிராம் ஹெரோய்ன்போதைப்பொருளை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கொழும்பு - கிரேண்ட்பாஸ் பகுதியில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் மடக்கப்பட்டனர்.

அவர்களிடம் 25 கிராம் 740 மில்லிகிராம் ஹெரோய்ன் மற்றும் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணம் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட அனைவரும் விசாரணையின் பின்னர் மாளிகாகந்த நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சில நாள்களுக்கு முன்னர் கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் சுமார் 295 கிலோக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டிருந்தது. (த)

## வெசாக் தினத்துக்கு முன்னர் கசிப்பு பாவனையை ஒழிப்பேன்

### மனோவிடம் மைத்திரி உறுதி



கொழும்பு, மார்ச் 1
எதிர்வரும் வெசாக் தினத்துக்கு முன் இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தளை மாவட்டங்களில் மற்றும் அவிசாவளை பிரதேசங்களில் கசிப்பு பாவனையை நிறுத்திக்காட்டுகிறேன் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கூறினார் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் மனோ கணேசன் விடுத்த ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தின்போது விடுத்த கோரிக்கைக்கு சிறிசேனஇந்தஉறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இரத்தினபுரி பாம் கார்டன் தோட்டங்களில் கசிப்பு வியாபாரத்துக்கு எதிராக நின்ற ஒரு தமிழ் இளைஞன் அடித்து கொல்லப்பட்டார். நேரடியாகச் சென்று பதட்டத்தைத் தணித்தேன். இல்லாவிட்டால் தோட்டத்து தமிழ் இளைஞர்கள் திருப்பி அடித்து இருப்பார்கள். தொடர்ந்து பதட்டம் நிலவியதால் பொலிஸ் இரவு, பகல் பணியில் இருக்கும் முழு நேர காவலரண் அமைக்கும்படி இரத்தினபுரி பிரதிப் பொலிஸ் மாதிபருக்கும், பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கும் கூறி இருந்தேன். முதலில் அதற்கு ஒப்புக்கொண்ட பொலிஸ் மாஅதிபர் இன்று வரை அதைச் செய்யவில்லை. இன்னொரு கொலை இங்கே நடந்தால் அதற்கு பொலிஸ் மாஅதிபர் பொறுப்பு ஏற்க வேண்டும். இன்று இந்தக் கூட்டத்துக்கு அவர் வரவில்லை. வெளிநாடு போய் விட்டாராம். பதில் பொலிஸ் மாஅதிபர் விக்கிரமரத்ன இங்கு இருக்கிறார். பூஜித் ஜயசுந்தர இங்கு இருப்பாரெனில் என்னிடம் நன்றாக வாங்கி கட்டி இருப்பார். அவரை திட்டவே நான் இங்கு வந்தேன் என்று கூறினார் என்றுள்ளது. (த)

# கூட்டு அரசை அமைக்கும் நம்பிக்கை இன்னுமுண்டு

### முன்னாள் அரசதலைவர் சந்திரிகா தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 1
இரு கட்சிகள் ஒன்றிணைந்த அரசாட்சியைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கை தனக்குள்ளது என்று முன்னாள் அரசதலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம்நடைபெற்றநிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் எதிரெதிர் துருவங்களாக இருந்த முக்கிய இரு கட்சிகளை இணைய வைத்ததன் ஊடாக 2015 இல் ஒன்றிணைந்த கலாசாரத்தை நாங்கள் உருவாக்கினோம். தற்போது அந்தநிலையில் மாறுதல் ஏற்பட்டுள்ளமை மிகுந்த கவலையளிக்கிறது.

அன்று ஏற்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதுடன் அதனை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையும் எனக்குள்ளது. நாட்டின் ஆளுந்தரப்பு உறுப்பினர் ஒருவர் எதிர்த்தரப்பு உறுப்பினரைப் பொது மேடை ஒன்றில் பெருமையாகப் பேசும் கலாசாரம் கடந்த காலங்களில் இருக்கவில்லை - என்றார்.

கூட்டு அரசு இருக்கக்கூடாது, தனித்து ஆட்சி அமைக்க வேண்டும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் வலியுறுத்தி வருகின்றனர். இதே வலியுறுத்தலை தலைமை அமைச்சர் வலியுறுத்தி வருகின்ற அதேநேரம் தனித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசில் வெல்வோம் என்றும் கூறி வருகிறார். எனினும் சந்திரிகா அணியினருடன் விக்கிரமசிங்க அணியினர் எதிர்ப்புப் போக்கைக் கடைப்பிடிக்காதுள்ளனர். (த)

## 65 துப்பாக்கிகள், சன்னங்களோடு 58 பேர் ஊவாவில் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 1
ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் இந்த வருட இரண்டு மாதங்களிலும் மிருகங்களை விரட்டும் வேட்டையாடும் 65 சட்ட விரோத துப்பாக்கிகளும் அவற்றுக்குரிய ஏராளமான ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.


பதுளை மாவட்டத்தில் 43 துப்பாக்கிகளும் மொனராகலை மாவட்டத்தில் 22 துப்பாக்கிகளுமாக 65 சட்ட விரோத துப்பாக்கிகள் மீட்கப்பட்டிருக்கின்றன என்று ஊவா மாகாண பிரதிப் பொலிஸ் அதிபர் ஜகத் பலியக்கார தெரிவித்தார்.

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை, சேனைப் பயிர்ச்செய்கை ஆகியவற்றை மிருகங்களிடமிருந்து பாதுகாக்கவே இந்தத் துப்பாக்கிகளைத் தாம் பயன்படுத்துவதாகக் கைது செய்யப்பட்டவர்கள் கூறியிருக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார். (த)

## பாலியல் தொல்லை குற்றச்சாட்டில் ஐ.ம.சு.கூட்டமைப்பு உறுப்பினர் கைது

கொழும்பு, மார்ச் 1
சிறுமிக்குப் பாலியல் தொல்லை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தென் மாகாண சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

16 வயதுச் சிறுமிக்கு பாலியல் தொல்லை புரிந்தார் என்று முறையிடப்பட்டதையடுத்து அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததையடுத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)




# ஐ.நா. தூதரை யாழ்ப்பாணம் அனுப்பி உரிமை மீறலை அறிக்கையிடுங்கள்

### நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் ஐ.நா தூதரை அமர்த்தி, அரசின் கையில் தமிழர்களுக்கு எதிராக முன்பு நடந்த, இப்போதும் தொடர்கிற மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஆறு மாதத்துக்கொரு முறை ஐ.நா மனிதவுரிமைப்பேரவைக்கு அறிக்கையளிக்கச் செய்யுங்கள்.

இவ்வாறு ஐ.நா மனித உரிமைகள் சபை ஆணையாளர் பசலே அம்மையாரிடம்நாடுகடந்ததமிழீழ அரசு கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமைஅமைச்சர் வி.உருத்திர குமாரன் அனுப்பியுள்ளார்.

அதில் உள்ளதாவது:

ஐ.நா. மனிதவுரிமைப் பேரவைக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் அளித்த உறுதிகளை எப்போதும் நிறைவேற்றுவதாகப் பொறுப்பற்ற முறையில் ஏய்க்காட்டி வரும் இலங்கையில், நீதியும் பொறுப்புக் கூறலும் மீளிணக்கமும் மெய்ப்படச் செய்யுங்கள்.

#### ஒருவரையும் விசாரிக்கவில்லை

'தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு இனப்படுகொலை செய்து பத்தாண்டுகள் உருண்டோடி விட்டன. ஒருவர் கூட விசாரணை செய்யப்படவில்லை. மற்ற ஒவ்வொருவருக்கும் கண்கூடாகத் தெரிகிற ஓர் உண்மையை ஐ.நா மனிதவுரிமைப் பேரவை கண் திறந்து பார்க்க உயர் ஆணையர் பசலே உதவவேண்டும்.

இலங்கை நெகிழ்வற்ற இனநாயக அரசு. தமிழர்களுக்கு எதிரான காழ்ப்புணர்ச்சி அதில் ஆழ வேரூன்றியுள்ளது. ஐ.நா மனிதவுரிமைப் பேரவைக்கான கடப்பாடுகளை மதிக்கும் எண்ணம் அதற்குத் துளியும் இல்லை.

தமிழர்கள் 'கடந்த காலத்தை மறந்து விட வேண்டும்' என்றும் வெளிப்படையாகவே ஐ.நா மனிதவுரிமைப் பேரவையின் முகத்திலடித்தாற்போல், தலைமைஅமைச்சர் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவ்வாறே அரசதலைவர் சிறிசேனவும் செயற்படுகிறார்.

மார்ச் 20ஆம் திகதி மீளாய்வுக்கு இலங்கை முன்னிற்கப் போகும் நிலையில், ஐ.நா மனிதவுரிமைப் பேரவையின் 30-1 தீர்மான உறுதிப்பாடுகளை நிறைவேற்ற அந்த நாட்டுக்கு மேலும் கால நீட்டிப்புத் தர மறுக்கும்படி பேரவையை வலியுறுத்துங்கள்.

#### வழக்குத் தொடுங்கள்

போர்க் காலத்தில் தமிழர்களுக்கு இலங்கை அரசு இழைத்த குற்றச் செயல்களைப் புலனாய்வு செய்ய அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம் அல்லது வேறொரு தற்சார்பான பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத்தொடுக்கவும்உருப்படியான நடைவடிக்கை எடுத்திடுங்கள்.

#### தமிழர்களை ஐ.நா. தவிக்கவிட்டுள்ளது

2017ஆம் ஆண்டு, இலங்கை ஐ.நா மனிதவுரிமைப் பேரவைக்குத் தந்த உறுதிகளை நிறைவேற்றுவதாகப் பாசாங்கு செய்ய மேலும் அவகாசம் தந்து, தமிழர் உரிமைகளை அரசு தொடர்ந்து மீறுவதற்கு இடமளித்த போதும் ஐ.நா தமிழர்களைத் தவிக்க விட்டது.

இலங்கை அரசு என்ன குற்றஞ் செய்தாலும் தண்டிக்க இயலாது என்ற நிலைக்கு ஐ.நா மனிதவுரிமைப் பேரவை முற்றுப்புள்ளி வைத்துக் கதவைச் சாத்தி, தமிழர்களுக்கு உள்ளபடியே நீதியும் பொறுப்புக் கூறலும் பெற்றுத்தரப் பாதையமைக்கும் ஆண்டாகத் திகழும் என்று நாடுகடந்த தமிழீழ அரசு நம்புகிறது - என்றுள்ளது. (த)

## நினைவு பேருரையும் துரைவி விருது வழங்கலும்

கொழும்பு, மார்ச் 1

துரைவி 88 ஆவது பிறந்த நாளில் நினைவுப் பேருரையும், துரைவி விருது வழங்கலும் கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வுக்கான நினைவுப் பேருரையைப் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் எம். எம். ஜெயசீலன் "மலையகத்தில் பெரிய எழுத்துப் பாரம்பரியமும் சிறுவெளியீடுகளும்" எனும்தலைப்பில் நிகழ்த்துவார்.

2018 ஆம் ஆண்டு வெளிவந்த மொழிபெயர்ப்பு நூல்களில் சிறந்த நூலாக தெரிவு செய்யப்பட்ட ஆங்கில கவிதைகளின் தமிழ்மொழிபெயர்ப்பு நூலான ஜிப்ரி ஹாஸனின் "மூன்றாம் பாலினத்தின் நடனம்" எனும் நூலுக்கும், 2018 ஆம் ஆண்டு வெளிவந்த ஆய்வு நூல்களில் சிறந்த நூலாக தெரிவு செய்யப்பட்ட முருகுகேசு பாக்கிய நாதனின் கல்விக் கண்திறந்த கோயில்கள்" எனும் நூலுக்கும் துரைவி விருதுகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ)

## நுழைவிசைவு இன்றி இலங்கைக்கு வரலாம்

### சில நாடுகளுக்கு மட்டும் 6 மாதங்களுக்குச் சலுகை

கொழும்பு, மார்ச் 1

பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் நுழைவிசைவு இன்றி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள முடியும் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு இந்த அறிவிப்பு நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து, பிரிட்டன், ஆஸ்திரேலியா, தென்கொரியா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, நியூசிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள், நுழைவிசைவைப் பெறாமல் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள முடியும். வெசாக், பொசன் பண்டிகைக் காலங்களில் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிப்பதற்காக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க அமைச்சரவையில் முன்வைத்த இந்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (த)

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை ஆய்வு செய்தது அமெரிக்கக் குழு!



கொழும்பு, மார்ச் 1

அமெரிக்க அதிகாரிகள் குழுவினர் சீன நிறுவனத்தின் வசமுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைப் பார்வையிட்டுள்ளனர். அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தலைமையிலான குழுவினரே அங்கு சென்றுள்ளனர்.

அம்பாந்தோட்டை துறைமுகப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் ஆய்வுப் பயணத்தை மேற்கொண்ட அமெரிக்கத் தூதுவர், அம்பாந்தோட்டை கடற்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி கொமடோர் அசோக விஜேசிறிவர்த்தனவைச் சந்தித்து பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்கள் குறித்து விசாரித்தார். இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ஜெயந்த சில்வா, அமெரிக்கத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் டக்ளஸ் ஹெஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த)



## அரசின் மீது மக்கள் வெறுப்பு அரசை அகற்றப் போராட்டம்

### மகிந்தானந்த எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 1

கூட்டு அரசைக் கொண்டு வந்த அனைவரும் அரசை வெறுத்துவிட்டனர். தற்போது விமர்சிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015, ஜனவரி மாதம் ஆட்சிக்கு வந்த இந்த அரசு தோல்வியடைந்த அரசு என்பதை அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன கூடத் தெரிவித்துள்ளார். அவர் மட்டுமன்றி முன்னாள் அமைச்சர்கள், தற்போதைய அமைச்சர்கள் என்று அனைவரும் இந்த அரசை விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதிலிருதே இது மக்கள் விரோதமான அரசு என்பது நன்றாகத் தெரிகிறது. அரச சொத்துக்களை விற்பனை செய்வது, தேர்தலைப் பிற்போட்டுக் கொண்டிருப்பது, வாழ்க்கைச் சுமை அதிகரிக்கின்றமை உள்ளிட்ட பல்வேறு சவால்கள் எழுந்துள்ளன.


**10 போராட்டங்கள்**

நாம் இதற்கெதிராகப் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளோம். இதற்குக் கண்டியிலிருக்கும் அனைவரும் கலந்து கொண்டு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாற்றுவார்கள் என்று எதிர்ப்பார்க்கிறோம். இதனை நாம் மார்ச் மாதத்துடன் நிறுத்திக்கொள்ள மாட்டோம். டிசெம்பர் மாதம் வரை 10 போராட்டங்களை நடத்த நாள்கள் குறித்துள்ளோம். இறுதிப் போராட்டம் கதிர்காமத்திலிருந்து கொழும்பு வரையான பேரணியாக இடம்பெறவுள்ளது.

பொறுத்தது போதும் என்ற தொனியிலான இந்தப் போராட்டம் அரசை வெளியேற்றும் முக்கியமான போராட்டமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை - என்றார். (த)

## இலங்கையில் உள்ள ஆயுதங்களை புதுப்பிக்க ரஷ்ய அரசு நடவடிக்கை

### பாதுகாப்பு அதிகாரிகளுடனும் பேச்சு



கொழும்பு, மார்ச் 1

இலங்கைப் படையினரிடம் உள்ள ரஷ்ய தயாரிப்பு ஆயுத தளபாடங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்துக் கொடுப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க ரஷ்ய உயர் அதிகாரிகள் குழு முன்வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யாவின் உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று இலங்கையில் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது. அதன்போதே மேற்கண்ட விடயம் கூறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளான மேஜர் ஜெனரல் அலெக்சாண்டர் சின்சென்கோ, கேணல் சோ்ஜி உர்சென்கோ, லெப். கேணல் றோமன் போப்ரஸ், விக்டர் பெட்ரோவ், றோமன் செபுர்னொவ் ஆகியோர் ரஷ்யக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களுடன் ரஷ்ய தூதுவர் யூரி பொறிசோவிச் மற்றும் ரஷ்ய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் அரச உயரதிகாரிகளுடன் பேச்சில் கலந்து கொண்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். பின்னர் இராணுவத் தலைமையகத்துக்கு சென்றிருந்த ரஷ்ய குழுவினர் இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

குறிப்பாக, இலங்கையின் கவசப் படைப்பிரிவு மற்றும் இயந்திர காலாட்படைப்பிரிவு, மின்னியல் மற்றும் இயந்திரப் பொறியியல் படைப்பிரிவுகளில் உள்ள கவசவாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களைப் பழுது பார்த்தல் மற்றும், புதுப்பித்துக் கொடுப்பது குறித்து இந்தப் பேச்சில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் நடக்கின்ற பயிற்சிகளில் பங்கேற்குமாறு இலங்கைப் படையினருக்கு இந்தக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப்பேச்சுக்களின்போது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யா அளித்த பங்களிப்புக்கு இலங்கை இராணுவத் தளபதி நன்றியைத் தெரிவித்துள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## அரசியல் எதிரிகள் ஒரே வரிசையில்



கொழும்பு, மார்ச். 1

அரசியலில் எதிரும் புதிருமாகவுள்ள முன்னாள் மற்றும் இன்னாள் அரச தலைவர்கள் இரண்டாவது தடவையாகவும் பொது நிகழ்வில் ஒன்றாகக் கலந்துகொண்டுள்ளனர்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் 40 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு கொழும்பு பண்டாநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. அதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரணதுங்க ஆகியோர் ஒன்றாகப் பங்கேற்றனர். அவர்களுடன் தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் உட்படப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

ஒக்ரோபர் அரசியல் குழப்பத்தின் பின்னர் மைத்திரிபால சிறிசேனவும் சந்திரிகா குமாரணதுங்கவும் க சந்தித்துக் கொள்வதை தவிர்த்து வந்திருந்தனர். இந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வு ஒன்றிலும் சந்திரிகா குமாரணதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். சந்திரிகா குமாரணதுங்க மைத்திரிபால சிறிசேனவை மாத்திரமன்றி மகிந்த ராஜபக்சவையும் கடுமையாக விமர்சித்து வந்திருந்தார்.

இந்தநிகழ்வில் உரையாற்றிய சிறிசேன, 2015 அரசதலைவர் தேர்தலில் ஜோன் அமரதுங்கவின் பங்களிப்பைத் தன்னால் மறக்க முடியாது. மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளவர் என்பதால்தான் அவர் நீண்ட காலம் அரசியலில் நிலைத்திருக்கிறார் என்றும் சிறிசேன தெரிவித்துள்ளார். (த)

# எனது பதவிக்காலம் வரை கல்விக்குத்தான் முதலிடம்

## ஆளுநர் உறுதி



சாவகச்சேரி, மார்ச் 1

கல்விக்கு முதலிடம் கொடுத்த ஒரு கலாசாரம் வடமாகாண கலாசாரம். இன்று நாம் விழுந்திருக்கின்றோம். மாவட்ட ரீதியாக 22 ஆவது இடத்திலும், மாகாண ரீதியாக 6 ஆவது இடத்தையும் பெற்றுள்ள வடமாகாணத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்காக நாம் பணி புரியவேண்டும். நான் ஆளுநராக இருக்கும் கடைசி நிமிடம்வரை கல்விக்கு முதலிடம் கொடுப்பேன் என்று ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடமாகாண இளையோரின் தொழிற்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் தயாரிக்கப்பட்ட மாணவர் மற்றும் இளையோரின் உயர்கல்வி, தொழிற்கல்வி தொடர்பிலான தகவல்கள் அடங்கிய கையேட்டை வெளியிடும் நிகழ்வு ஆளுநர் தலைமையில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆளுநர் தெரிவித்ததாவது:

கல்வி என்பது சமூக செயல். அது ஒரு சமூக ஈடுபாடு. சமூக தரிசனம். கல்வியால் மட்டுமே நாகரிகம் வளரும். இந்த நிகழ்வின் மூலம் கல்விக்கு இன்னோர் புதிய பரிணாமத்தை தந்துள்ளோம். கல்வியின் மூலம் வரலாற்றில் பல நன்மைகளை பதிவிடவேண்டும். வடமாகாணத்துக்கான வரவு-செலவிலே சுமார் 60 சதவீதம் கல்விக்காக நாம் செலவிடுகின்றோம். பல்கலைக்கழகங்கள் மட்டுமல்லாமல் தொழில்சார்ந்த துறைகளிலும் மாணவர்கள் முன்னேறவேண்டும். கல்வி ஒரு சேவைக்கான பாதையாக இருக்கவேண்டும். இந்த முயற்சி அவ்வாறு அமையும் என்று நான் நம்புகின்றேன் - என்றார்.

மாணவர்கள் மற்றும் இளையோர் தங்களது தொழிற்கல்வி திறன்களை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கமாக இந்தக் கையேடு வெளியிடப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியை முடித்த பின்பு மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் தொழிற்கல்வியை எங்கு பெற்றுக்கொள்ளலாம் என்பது தொடர்பிலான விடயங்கள் இந்த கையேட்டில் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ,5)



## இலங்கை ஆசிரிய சேவை ஒன்றியத்தால் கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மார்ச் 1

பத்தரமுல்ல - இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சின் கட்டடத் தொகுதிக்கு முன்னால் இலங்கை ஆசிரிய சேவை ஒன்றியத்தால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நேற்று நீர்த்தாரைப் பயன்பாடு மேற்கொள்ளப்பட்டது. கடந்த 22 வருடங்களாகத் தாம் எதிர்நோக்கி வரும் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குதல், 30 மாதங்களாக நிலுவையிலுள்ள சம்பளத்தை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைத்தே, இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக, பத்தரமுல்ல - பெலவத்த பிரதேசத்தில், கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நோயாளர் காவுவண்டி சேவையை விரிவாக்குவதற்கு ரூ.2,000 மில்லியன்

### அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 1

நோயாளர் காவுவண்டிச் சேவையை விரிவுபடுத்துவதற்கு புதிய வரவு - செலவு திட்டத்தில் 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

'சுவசெறிய' நோயாளர் காவுவண்டிச் சேவை அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் தலைமையில் கண்டியில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவித்த அவர், 'செல்வந்தர்களால் எந்தத் தொகைக்கும் நோயாளர் காவுவண்டிச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், குறைந்த வருமானம் பெறுவோரின் நலன் கருதி நோயாளர் காவுவண்டிச் சேவையை விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

இவ்வளது காலமும் ஒரு மருத்துவமனையில் இருந்து இன்னொரு மருத்துவமனைக்குச் செல்வதற்கான நோயாளர் காவுவண்டிச் சேவை மாத்திரமே காணப்பட்டது. ஆனால், 1990 நோயாளர் காவுவண்டிச்சேவையின் மூலம் நோயாளி ஒருவரை அவரது வீட்டிலிருந்து 12 நிமிடங்களுக்குள் மருத்துவமனையில் சேர்க்கும் வகையில் சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது' எனத் தெரிவித்தார். (ம)

## காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக இரண்டு கிளைகள் மார்ச் மாதத்தில்!

கொழும்பு, மார்ச் 1

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் இரண்டு கிளைகள் மார்ச் மாதம் திறக்கப்படவுள்ளன. அதன்படி குறித்த பிராந்தியக் கிளைகள் மன்னார் மற்றும் மாத்தறை மாவட்டங்களில் திறந்து வைக்கப்படவுள்ளதாக அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில், பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அலுவலகத்தின் தலைவர் அரச தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான நிகழ்வு அடுத்த மாதம் 9ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)



## நெடுங்கேணி ம.வித்தியில் கைக்குண்டொன்று மீட்பு!

வவுனியா, மார்ச் 1

வவுனியா நெடுங்கேணி மகா வித்தியால வளாகத்தில் வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று நேற்று மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

'நெடுங்கேணி மகா வித்தியாலயத்தின் வளாகத்தில் சந்தேகத்துக்கு இடமான பொருள் ஒன்று இருப்பதை பாடசாலை நிர்வாகம் அவதானித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் கைக்குண்டை அவதானித்துள்ளதுடன் அந்த இடத்தைப் பாதுகாப்புப் பகுதியாக அறிவித்தனர். நீதிமன்ற அனுமதியின் பின்னர் குறித்த கைக்குண்டு அகற்றப்பட்டது. சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

## மன்னாரில் 42 லட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்!




மன்னார், மார்ச் 1

மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் 42 கிலோ 50 கிராம் கேரளக் கஞ்சாவுடன் நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று மன்னார் மாவட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட ஊழல் ஒழிப்புப் பிரிவு பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து மன்னார்தலைமன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போதே குறித்த கஞ்சாப் பொதி மீட்கப்பட்டது. அவற்றைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் 37 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-56)

## பிரபல பாதாளக்குழு உறுப்பினரான 'தெமட்டகொட ருவன்' உள்ளிட்டோர் கைது!

கொழும்பு, மார்ச் 1

திட்டமிட்டு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்தவர் என்று கருதப்படும் பிரபல பாதாளக்குழு உறுப்பினரான தெமட்டகொட ருவன் உள்ளிட்ட 8 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட குறித்த 8 பேரில் பாகிஸ்தான் தம்பதியினரும் அடங்குகின்றனர்.

சந்தேக நபர்களிடமிருந்து துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள், பணம் எண்ணுவதற்குப் பயன்படுத்தப்படும் 2 கருவிகள், 4 கிராம் ஹெரோய்ன் மற்றும் 3 சொகுசு வாகனங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-22)

# போர்க் குற்றங்களில் புலிகளே ஈடுபட்டனர்

## மல்வத்துபீட தேரர் கண்டுபிடிப்பு



**கொழும்பு, மார்ச். 1**
**இறுதிப் போரில் விடுதலைப் புலிகளே மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என்று மல்வத்து பீட அநுநாயக்க திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார். எனினும், விடுதலைப் புலிகளின் ஒரு பிரிவாக வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள், புலிகளின் குற்றங்களை மறைத்து, இராணுவத்தினர் மீது போர்க் குற்றம் சுமத்துகின்றனர் என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.**

இலங்கையுடனான பரஸ்பர புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ளும் நோக்குடன் மியன்மார் ஊடகவியலாளர் குழுவினர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் நேற்று மல்வத்து மகா விகாரை பிரிவின் அநுநாயக்கரை சந்தித்தனர். இதன்போதே அநுநாயக்கர் திம்புல் கும்புரே விமல தம்ம தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், 'இலங்கையில் 30 வருட போரால் இரு தரப்பிலும் பெரிய இழப்புக்கள் ஏற்பட்டன. விடுதலைப் புலிகள் மக்களோடு மக்களாக மறைந்திருந்து போர் செய்யும்போது, இலங்கைப் படையினரின் தாக்குதலில் புலிகளுடன் பொதுமக்களும் கொல்லப்பட்டனர். இதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், ஆயுதம் ஏந்தி போராடிய விடுதலைப் புலிகள் மிகப்பெரிய அளவில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர்.

இப்படி இருக்கையில், ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக போர்க்குற்றம் சுமத்தப்படுகின்றது. வெளி நாடுகளும், மனித உரிமைகள் அமைப்புக்களும் அதனை ஏற்றுக்கொள்ள முனைகின்றன. உண்மையில் படையினருக்கும், சிங்கள மக்களுக்கும் எதிரான தாக்குதல்கள், மீறல்கள், இழப்புக்கள், மத்திய வங்கி மீதான பல தாக்குதல்கள் குறித்து யாரும் பேசுவதில்லை' -என்றார். (ம)

*யாழ்ப்பாண*

# பிரதேச செயலராக சுதர்சன் நியமனம்



யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ்ப்பாணப் பிரதேச செயலராக, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இதுவரை உதவி மாவட்டச் செயலராகப் பணியாற்றிய சாம்பசிவம் சுதர்சன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்று தனது கடமைகளை யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உதவித் திட்டப் பணிப்பாளராக அவர் அரச சேவையில் இணைந்து கொண்டார். மாவட்டச் செயலக புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தின் உதவித் திட்டப் பணிப்பாளராக பணியாற்றிய காலத்தில், இறுதிப் போரில் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களை, யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரும் பணியை மேற்கொண்டிருந்தார்.

இதன் பின்னர் மீள்எழுச்சித் திட்டம், வடக்கின் துரித மீட்சித் திட்டம் என்பவற்றின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், உதவி மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாண தந்திரோபாய நகர் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். 2016ஆம் ஆண்டு, இலங்கை நிர்வாக சேவை முதல் தரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். இந்த நிலையில், யாழ்ப்பாணப் பிரதேச செயலராக இன்று தனது கடமைகளை அவர் பொறுப்பேற்கவுள்ளார். (ஓ.5)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

## ஜானக வகும்பர வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 1
பொய்யான குற்றச்சாட்டை வழங்கி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அவப் பெயரை ஏற்படுத்திய இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக வகும்பர தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொக்கைன் போதைப் பொருளைப் பாவித்துள்ளார்கள் என்ற ரஞ்சன் ராமநாயக்கவின் குற்றச்சாட்டு தற்போது பொய்யாகியுள்ளது. இந்த விசாரணைகளை முன்னெடுத்த குழுவினர் ஐக்கிய தேசிய கட்சியினர். ஆகவே அவர்கள் ஒருபோதும் கட்சிக்கு எதிராக செயற்படமாட்டார்கள். இந்த நிலையில் அவரின் குற்றச்சாட்டு உண்மை தன்மையற்றது என்ற நிலைப்பாடே தற்போது காணப்படுகின்றது. பொய்யான குற்றச்சாட்டின் காரணமாக ஒட்டுமொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று மக்கள் மத்தியில் அவமதிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ம)

# உடுவிலில் வீட்டைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைது

உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள வீடொன்றைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஐந்து பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் வலி. தெற்கு பிரதேச சபையின் தமிழ் அரசுக்கட்சி உறுப்பினரும் ஒருவர்.

கடந்த வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் 8 பேர் கொண்ட கும்பல் குறித்த வீட்டின் ஜன்னல்களை உடைத்துவிட்டுத் தப்பிச் சென்றது என்று சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. இந்த முறைப்பாட்டின் மீது எடுக்கப்பட்ட மேலதிக நடவடிக்கைகளை அடுத்தே ஐவரும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் அனைவரும் உடுவில் மல்வத்தைச் சேர்ந்தவர்கள். அனைவரும் மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.ஜி. அலக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களை பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார். (ம-26)

# பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் இடமாற்றம்

சாவகச்சேரி, மார்ச் 1
தென்மராட்சிப் பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களாகக் கடமையாற்றிய 18 பேர் ஏனைய பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு இன்று புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

கடந்த ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றல் வழங்கப்படடிருந்த நிலையில் இடமாற்றல் தாமதமாக வழங்கப்பட்டு நேற்றுப் பிரதேச செயலகத்தால் விடுவிப்புக் கடிதங்கள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# ஊதிய விவரங்களை அறிவித்தனர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர்

கொழும்பு, மார்ச் 1
நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேர் தாமாக முன்வந்து தமது ஊதிய விவரங்களை பொதுமக்களுக்காக வெளியிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், தாரக பாலசூரிய, விதுர விக்கிரமநாயக்க, இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரே அவ்வாறு வெளியிட்டவர்களாவர். (ம)

# யாழ் முஸ்லிம் ச.ச. நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைக்கப்பட்ட முஸ்லிம் சனசமூக நிலையத்தின் திறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம)

# பிரபல ரக்பி வீரர் தாஜூடீன் கொல்லப்பட்ட தினத்தில் அலரி மாளிகையில் இருந்து வாகனங்கள் சென்றதேன்?

## இந்தக் கோணத்தில் தற்போது விசாரணை

கொழும்பு, மார்ச் 1
இலங்கையின் பிரபல ரக்பி வீரர் வாசிம் தாஜூடீன் கொலை செய்யப்பட்ட தினத்தன்று அலரி மாளிகையிலிருந்து புறப்பட்ட நான்கு வாகனங்கள் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன என சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

தாஜூடீன் படுகொலை தொடர்பில் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யவுள்ளதாகவும் சட்டமாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் சார்பில் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் முன்னிலையாகிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்

நாரஹன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித்பெரேரா, முன்னாள் மூத்த பிரதிபொலிஸ்மா அதிபர் அனுரசேனநாயக்க, முன்னாள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர ஆகியோருக்கு எதிராகவே குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்ய உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாஜூடீன் படுகொலை தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறும் என குறிப்பிட்டுள்ள அவர், கொலை இடம்பெற்ற தினத்தன்று அலரி மாளிகையிலிருந்து புறப்பட்ட நான்கு வாகனங்கள் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் தெரிவித்துள்ளார். முன்னாள் அரச தலைவரின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய இராணுவ கடற்படை அதிகாரிகள் குறித்தும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். எனினும் அவர்கள் குறித்த உத்தியோகபூர்வ ஆவணங்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# மத்தியஸ்தம் செய்யத் தயார்

## ட்ரம்ப் அறிவிப்பு

ஹனோய்.மார்ச் 1
இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்காக இரண்டு நாடுகளிடையேயும் மத்தியஸ்தம் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன்னுடனான சந்திப்பின் நிமித்தம் வியட்நாமின் தலைநகர் ஹனோயில் தங்கியிருக்கின்ற நிலையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றம் சூழ்ந்துள்ள நிலையில் அதைத் தணிக்கும் முயற்சியில் உலக நாடுகள் பலவும் இறங்கியுள்ளன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இதுதொடர்பாக அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. இந்தியாவும், பாகிஸ்தானும் கட்டுப்பாட்டைக் கடைபிடித்து அமைதி நிலவ முன்வர வேண்டும் என அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன. இந்த நிலையிலேயே "இந்தியா - பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்து உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்" என்று ட்ரம்ப் கூறினார்.



# நைஜீரியா அதிபராக முஹம்மது புஹாரி

நைஜர்.மார்ச் 1
நைஜீரியாவில் நடந்த அதிபர் தேர்தலில் தற்போதையை அதிபர் முஹம்மது புஹாரி 56 சதவீதம் வாக்குகளைப் பெற்று மீண்டும் அதிபரானார். ஆபிரிக்காக் கண்டத்தில் அதிகமான மக்கள்தொகை கொண்ட நைஜீரியாவில் கடந்த 23ஆம் திகதி தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் அந்த நாட்டின் வரலாற்றில் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிபர் பதவிக்கு மட்டும் 73 பேர் போட்டியிட்டனர். இருப்பினும் இந்தத் தேர்தலில் நைஜீரியாவின் தற்போதைய அதிபரான முஹம்மது புஹாரியே மீண்டும் வெற்றி பெற்றார்.



# இடிந்தது தங்கச் சுரங்கம்

## இந்தோனேசியாவில் மூவர் சாவு

ஜகார்த்தா.மார்ச் 1
இந்தோனேசியாவில் சட்டவிரோதமாகச் செயற்பட்டு வந்த தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்தது. அந்த விபத்தில் 3 தொழிலாளர்கள் சாவடைந்தனர். இந்தோனேசியாவின் சுலாவேசி மாகாணத்திலுள்ள போலாங் மோங் கோண்டவ் நகரில் இந்தச் சம்பவம் நடந்தது. சட்ட உரிமம் பெறாமல் செயல்பட்டு வந்த இந்தச் சுரங்கத்தில் தங்கத்தை அகழும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே இந்த விபத்தில் சிக்கிச் சாவடைந்தனர். சுரங்கம் இடிந்துவிழுந்தபோது சுரங்கத்துக்குள் 60பேர் சிக்கியுள்ளனர். அவர்களில் 13 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு3பேர் சாவடைந்த நிலையில் மீட்கப்பட்டனர். ஏனையவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி இருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. மீட்புப் பணி நடந்து வருகிறது.

# இரட்டை இலைச் சின்னம் ஓபிஎஸ்-இபிஎஸ் தரப்புக்கே

## டெல்லி உயர்நீதிமன்று தீர்ப்பு

புதுடெல்லி.மார்ச் 1
இரட்டை இலைச் சின்னத்தைத்தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரின் ஒருங்கிணைந்த அ.தி.மு.க.வுக்கு ஒதுக்கியதே சரியானது என டெல்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரின் ஒருங்கிணைந்த அ.தி.மு.க.வுக்குத் தேர்தல் திணைக்களம் இரட்டை இலைச் சின்னத்தை ஒதுக்கியது.



இதை எதிர்த்து சசிகலா, டி.டி.வி.தினகரன் சார்பில் டெல்லி உயர்நீதிமன்றில் வழங்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு முடிவிலேயே எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரின் ஒருங்கிணைந்த அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலைச் சின்னத்தைத் தேர்தல் ஆணையம் ஒதுக்கீடு செய்தது முறையானது என நீதிபதிகள் தெரிவித்தனர். தேர்தல் திணைக்களத்தின் உத்தரவை எதிர்த்து சசிகலா, டிடிவி தினகரன் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களையும் நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், இந்தத் தீர்ப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.



சிரியாவில் அரச படைகளுக்கும் ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கும் இடையே நடந்து வரும் போரால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் குழந்தைகளே ஏராளம். அந்தவகையில் சிரியாவின் பக்ஹோவுஷ் டேய்ர் அல் ஷெர் என்கிற பகுதியில் போருக்கு நடுவில் பெற்றோரைத் தவறவிட்ட பிள்ளைகளை ஒரு 'டிரக்' வண்டிக்குள் சிரியப் படையினர் ஏற்றி வைத்துள்ளனர்.



# இன்றைய நாள்

**மேடம்:** சிலர் சுய லாபம் பெற புகழ்ந்து பேசுவர். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு அவசியம்.

**இடபம்:** நற்செயலை சிலர் குறைகூறி பேசுவர். பெருந்தன்மையுடன் விலகுவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும். பிறர் பார்வையில் தெரியும்படி அதிகம் செலவு செய்ய வேண்டாம்.

**மிதுனம்:** வாழ்வில் சுயநலம் கருதாமல் செயல்படுவீர்கள். கடந்த கால உழைப்புக்கு கிடைக்க வேண்டிய நற்ப லன் தேடிவரும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** சுதந்திரமாக செயல்படுவீர்கள். புதிய சாதனை நிகழ்த்த தேவையான முயற்சி செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாகும்.

**சிங்கம்:** இடையூறு செய்பவரை அறிந்து கொள்வீர்கள். பணி குறித்த காலத்தில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். செலவில் சிக்கனம் நல்லது.

**கன்னி:** செயல்களில் கூடுதல் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறு சரி செய்வதால் வளர்ச்சி சீராகும். அளவான பணவரவு கிடைக்கும். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**துலாம்:** நண்பரின் ஆலோசனையை மதித்து நடப்பீர்கள். தகுதி திறமை வளர்ந்து புதிய நன்மைகளை பெற்றுத் தரும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் உண்டு. பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**விருச்சிகம்:** உறவினரிடம் பேச நினைத்த விஷயம் மாறி போகலாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதமாகும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**தனுசு:** மனதில் அன்பும் கருணையும் நிறைந்திருக்கும். உறவினர், நண்பர் பாசத்துடன் பாராட்டுவர். தொழில் வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும்.

**மகரம்:** வீணான பேச்சுக்களில் கவனம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலங்களை பாதுகாப்பது நல்லது. அதிக பயன்தராத பொருட்கள் வாங்குவதை தவிர்க்கவும்.

**கும்பம்:** நீதி நேர்மைக்கு அதிக முக்கியத்துவம் தருவீர்கள். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். தொழில், வியா பாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.


**மீனம்:** செயல்களில் உத்வேகமும் சமயோசிதமும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். பணவரவில் லாப விகிதம் அதிகரிக்கும்.

## ட்ரம்ப் - கிம்

# சந்திப்புத் தோல்வியில் முடிந்தது எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை

ஹனோய், மார்ச் 1

வியட்நாமின் தலைநகர் ஹனோயில் நேற்றும் நேற்று முன்தினமும் நடந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஆகிய தலைவர்களின் சந்திப்பின் முடிவில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை என்று வெள்ளை மாளிகை தெரிவித்தது. ஆதலால் இந்த இரண்டாவது சந்திப்புத் தோல்வியில் முடிந்ததாகக் கருதப்படுவதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



ஹனோயில் இந்த இரண்டு தலைவர்கள், அவர்களுடன் பயணித்த குழுக்களுக்குஇடையேபேச்சுக்கள் நடந்தன. ஆனால் அவற்றின் முடிவில் எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை என அமெரிக்க அதிபர் வாசஸ்தலமான வெள்ளை மாளிகை தெரிவித்தது. அணு ஆயுதத்தை முழுமையாகக் கைவிடுவதற்கு வடகொரியா சம்மதம் தெரிவிக்குமா? என்பதே இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்ட முக்கிய விடயமாக இருந்தது என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்தது. நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த சந்திப்பில் இரண்டு நாட்டுத் தலைவர்களும் தனியாகச் சந்தித்துப்பேசினார்கள்.

பின்னர் நேற்று இரவு விருந்தில் இரண்டு தலைவர்களும் கலந்து கொண்டனர். அப்போது அமெரிக்கப் பாதுகாப்பு செயலர் மைக் பாம்பியோமற்றும்கிம்மின் மூத்த ராஜியத் தூதுவர் கிம் யாங் சோல் உடனிருந்தனர்.

வியட் நாமில் வடகொரியாவின் கிம் ஜோங் உன் உடனான இரவு விருந்தும் சந்திப்பும் அருமையாக இருந்தன. பேச்சுக்கள் நல்லபடியாக நடந்தன என்று இந்த இரவு விருந்துக்குப் பிறகு ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதி விட்டார். செய்தியாளர்கள்சுருக்கமானகேள்விகள்கேட்கவே அனுமதிக்கப்பட்டனர்.

"கொரியப்போர்அதிகாரபூர்வமாக முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்படுமா?" எனச் செய்தியாளர்கள் கேட்டதற்கு "பார்க்கலாம்..."என்றுபதிலளித்தார் ட்ரம்ப். இரண்டாவது தினமான நேற்று இந்த இரண்டு தலைவர்களிடையே முக்கிய ஒப்பந்தங்கள்கையெழுத்தாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவை குறித்த மேலதிக விவரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை. ஆனாலும் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு இந்தப் பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லைஎன்பதாகவேபன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.





# போர் வேண்டாம்!



இஸ்லாமபாத். மார்ச் 1

'போர் வேண்டாம்' என்ற கோஷங்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளிலும் கீச்சகப் பக்கத்தில் பரப்பப்பட்டு அதிகம் பேசப்படும் விடயமாகியுள்ளது.

'போர் ஒரு வாய்ப்பு அல்ல.

நாம் புத்திசாலித்தனமாகச் செயல்பட வேண்டும். கைது செய்யப்பட்ட விமானி கண்ணியம் மற்றும் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும். மனிதநேயத்தை மறக்க வேண்டாம். அவர் எவரோ ஒருவரின் கணவர், ஒருவரின் தந்தை' எனப் பாகிஸ்தான் நாட்டவர் ஒருவர் கருத்துப் பகிர்ந்திருக்கிறார். நமக்கு மற்றுமொரு போர் தேவையில்லை. இந்தியாவும், பாகிஸ்தானும் பேச்சு மூலம் தீர்வு காணுங்கள் என்று அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மலாலாவும் தெரிவித்தார்.

மலாலா தனது கீச்சகப் பக்கத்தில், நமக்கு மற்றுமொரு போர் தேவையில்லை. தற்போது போரின் ஆபத்தில் சிக்கியுள்ள மக்களை இந்த உலகம் கண்டுகொள்ளவில்லை என்று பதிவிட்டுள்ளார். பாகிஸ்தான் தலைமை அமைச்சராகப் பதவியேற்றது முதல் புல்வாமாவில் தாக்குதல் நடத்தப்பட்டு, இந்தியா பாகிஸ்தானுக்குள் ஊடுருவித் தாக்கிய நாள் வரை இம்ரான் கான் இந்தியாவைப் பேச்சு மேடைக்குத் தொடர்ந்து அழைத்து வருவதும், இந்தியா அதற்கு மௌனம் காப்பதும் குறிப்பிடத்தக்கது.

# விமானியை விடுவியுங்கள் கோருகிறது இந்தியா

## ஓரிரு நாள்களில் முடிவு என்கிறது பாகிஸ்தான்

இஸ்லாமபாத். மார்ச் 1



பாகிஸ்தானால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் இந்திய விமானி அபினந்தனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் எனப் பாகிஸ்தான் அயலுறவுத்துறையிடம் பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதர் கோரிக்கை விடுத்தார்.

பாகிஸ்தான் எல்லைக்குள் ஊடுருவித் தாக்கிய இந்திய வானூர்திகளைப் பாகிஸ்தான் இராணுவம் சுட்டு வீழ்த்தியது. ஊடுருவிய வானூர்தியைச் செலுத்திச் சென்ற விமானி அபினந்தனைக் கைது செய்து, அது தொடர்பான விவரத்தையும், அபினந்தன் பேசுவதான காணொலியையும் வெளியிட்டது.

இந்தக் காணொலி வெளியிட்டதற்குக் கண்டனம் தெரிவித்த இந்திய அயலுறவுத்துறைத் தூதர், காயமடைந்த இந்திய விமானியின் படங்களை மோசமான வகையில் காட்சிப்படுத்துதல் பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களின் அனைத்து விதிமுறைகளையும் மீறும் செயல் என்றும் கூறியதுடன் விமானி அபினந்தனை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளிக்கும் முகமாக அவரை விடுவிப்பது பற்றி ஓரிரு நாள்களில் முடிவு எடுக்கப்படும் எனப் பாகிஸ்தான் அயலுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

இதுகுறித்துப் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான், இந்தியத் தலைமை அமைச்சர் மோடியிடம் தொலைபேசியில் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகவும் தகவல் வெளியாகியிருக்கிறது.

# இராணுவ நடவடிக்கையை கைவிடுங்கள்

## அறிக்கை வெளியிட்டது பென்டகன்

வோஷிங்டன். மார்ச் 1

இராணுவ நடவடிக்கையை இந்தியாவும் பாகிஸ்தானும் கைவிடவேண்டும் என்று அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிக்கை வெளியிட்டது. புல்வாமா தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா- பாகிஸ்தான் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்திய வான்படை பாகிஸ்தானுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியதைத் தொர்ந்து இந்திய வானூர்திகள் பாகிஸ்தானால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் இருதரப்பாரும் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் தற்போதைய சூழல் கவலை அளிப்பதாகவும், இரண்டு நாடுகளும் இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிக்கை வெளியிட்டது.

## பாக். மீதான தாக்குதலை தொடருமாறு வலியுறுத்துகிறது சிவசேனாவின் பத்திரிகை

மும்பை. மார்ச் 1

பாகிஸ்தான் உலகுக்கே ஆபத்தான நாடு என்றும், அதன் மீதான தாக்குதலை இந்தியா தொடர வேண்டும் என்றும் இந்தியாவைச் சேர்ந்த இந்து அமைப்பான சிவசேனா வலியுறுத்தியது. சிவசேனா கட்சியின் அதிகார பூர்வ பத்திரிகையான சாம்னாவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உலக வரைபடத்தில் பாகிஸ்தான் துடைத்தெறியப்படும் வரை உலகம் முழுவதும் அமைதி இருக்காது. பாகிஸ்தான் போன்ற நாடு இந்தியாவுக்கு மட்டும் அல்ல ஒட்டுமொத்த உலகத்துக்கும் ஆபத்தானது. அங்கு தொடரும் தீவிரவாதத்துக்கு முடிவு கட்டும் வரை, நமது நாட்டு இராணுவத்தினரின் நடவடிக்கையும் தொடர வேண்டும்.

பாகிஸ்தானின் மண்ணில் அல் கொய்தா தலைவரான ஒசாமா பின் லேடனை அமெரிக்கா சுட்டுக் கொன்றது.

40 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பழிவாங்கும் விதமாக ஜெய்ஷ் இ முகமது அமைப்பின் தலைவர் மசூத் ஆசாரும் அதே பாணியில் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானும் வானூர்தி நிலையங்களை மூடியது

லாகூர். மார்ச் 1

புல்வாமா தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்குள் ஊடுருவித் தாக்கிய இந்திய வானூர்திகளைப் பாகிஸ்தான் சுட்டு வீழ்த்திய நிலையில், இரண்டு நாடுகளுக்கும் இடையேயான எல்லைப் பகுதியில் போர்ப்பதற்றம் ஏற்பட்டது. நேற்றையதினம் இந்தியாவின் எல்லைப்புறப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்த்தப்பட்டார்கள். அத்தோடு எல்ல்லையிலுள்ள வானூர்தி நிலையங்களையும் மூடியது இந்தியா.

இந்தியாவின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து எல்லைப் பகுதியிலுள்ள தனது வானூர்தி நிலையங்களைப் பாகிஸ்தானும் மூடியுள்ளது.

பாகிஸ்தானின் லாகூர், இஸ்லாமாபாத், முல்தான், பைசாலாபாத், சியோல்கோட் ஆகிய நகரங்களில் உள்ள பன்னாட்டு வானூர்தி நிலையங்கள் காலவரையின்றி மூடப்படுவதாகப் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.



# அரசியல் ஆதாயத்துக்காக போருக்கு நிற்கிறார் மோடி

இஸ்லாமபாத், மார்ச். 1

அரசியல் ஆதாயத்துக்காகவே இந்தியத் தலைமை அமைச்சர் மோடி வலிந்து போருக்கு நிற்கிறார். இது வெளியில் தெரிவதற்கு இரண்டு நாள்கள் ஆகியுள்ளது என்று தெரிவித்தார் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான்கான்.



பாலகோட் தாக்குதலால் மோடி அலை அபாரமாக வீசுவதாகவும் பாஜகவுக்கு வெற்றிவாய்ப்பு பிரகாசமாகி உள்ளதாகவும் எடியூரப்பா முன்னதாகத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர், 'ஒவ்வொரு நாளும் பாஜகவுக்கு ஆதரவான சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது. காற்று பாஜகவின் பக்கம் வீசுகிறது. பாகிஸ்தான் எல்லைக்குள் சென்று தீவிரவாதிகள் பதுங்கி இருந்த இடங்களை மோடி அழித்துள்ளார். இது நாடு முழுவதும் மோடி ஆதரவு அலையை உருவாக்கியுள்ளது. இதன் தாக்கம் வர இருக்கும் மக்களவைத் தேர்தலில் தெரியும். இதனால், மக்களவைத் தேர்தலில் கர்நாடகாவில் 28 தொகுதிகளில் 22 தொகுதிகளில் பாஜகவுக்கு வெற்றி கிடைக்கும் என்று தெரிவித்திருந்தார்.

இராணுவ தாக்குதல்களை அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்துவதாக பாஜக மீது எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வரும் சூழலில் அதை நிரூபிப்பதுபோல் எடியூரப்பா பேசியிருப்பது சர்ச்சையைக் கிளப்பியது. இந்த நிலையில் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கானின் பிடிஐ (பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப்) கட்சி பாஜக அரசு மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது. இதுதொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள பிடிஐ, 'அணுசக்தி ஆயுதங்களைக் கொண்ட இரண்டு நாடுகளை உச்சபட்ச பதற்ற நிலைக்கு இட்டுச் செல்வதன் பின்னால் அரசியல் விளையாட்டு இருக்கிறது. இது வெளியே தெரிய இரண்டு நாள்கள் ஆகியிருக்கிறது. இதற்கான காரணம் 22 சீற்கள் மட்டுமே. இந்தக் காலகட்டத்தில், எந்தத் திட்டமும் ரகசியமாகவே இருக்க முடியாது. இந்தியர்களே குறித்துக்கொள்ளுங்கள். போருக்கு நோ சொல்லுங்கள்" என்று பிடிஐ தெரிவித்துள்ளது. (ம)

# சொகுசுப் பேருந்தொன்று நேற்றிரவு விபத்து



யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசுப் பேருந்தொன்று நேற்று இரவு விபத்துக்குள்ளானது.

பரந்தன் சந்தியிலேயே குறித்த பேருந்து விபத்துக்குள்ளானது என்றும், பேருந்தின் செலுத்துநர் உட்பட சில பயணிகள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-109)

## இந்தியச்...

இந்திய இரு வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதன்போது தமிழகத்தைச் சேர்ந்த அபிநந்தன் பாகிஸ்தானால் சிறைப்பிடிக்கப்பட்டார். அவரை விடுவிக்க வேண்டும் என்று இந்தியா இராணுவ ரீதியிலும், தூதரக ரீதியிலும் அழுத்தம் வழங்கி வந்தது. உலகில் பல பகுதிகளில் இருந்தும் அபிநந்தனுக்கு ஆதரவுகள் குவிந்தன. இந்த நிலையில் அவர் நாளை (இன்று) விடுவிக்கப்படுவார் என்று தெரிவித்தார் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான்.

இது தொடர்பில் பாகிஸ்தானின் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த இம்ரான் கான், அமைதியின் பேரில், அமைதியை விரும்பி இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது - என்று தெரிவித்தார். இம்ரானின் நிலைப்பாட்டுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மேசைகளில் தட்டி ஆதரவை வெளிப்படுத்தினார்கள். (ம)

## பௌத்தர்களின்...

வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள விகாரைகளின் விவரங்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் திரட்டப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் எத்தனை பௌத்தர்கள் வசிக்கின்றனர் என்ற விவரம் திரட்டப்பட்டு வருகின்றது. இது தொடர்பான விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சு பணித்துள்ளது. (ஓ,5,105)

## இலங்கை...

தொண்டமனாறு பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் மோகனராசா, இராசலிங்கம் இராசசிறி ஆகிய மீனவர்களே அவ்வாறு கைது செய்யப்பட்டனர். இலங்கை மீனவர்கள் பயணித்த குறித்த படகு இயந்திரக்கோளாறு காரணமாக இந்தியக் கடற்பரப்புக்குள் சென்றது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-26)

## அதிகாரப் பகிர்வுக்கு...

தலைவர் மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைக் கடிந்துகொண்டார்.

புதிய அரசமைப்பு உருவாக்கல் முயற்சி தேக்கமடைந்திருந்த நிலையில் அதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கோரியிருந்தார். அந்தக் கோரிக்கைக்கு அமைவாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சர்வகட்சிக் குழுக் கூட்டத்தை நேற்றுக் கூட்டினார்.

கூட்டம் ஆரம்பித்ததும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இரா.சம்பந்தனை நோக்கி, இந்த சர்வகட்சிக் குழுக் கூட்டத்தை ஏன் அவசரமாக கூட்டச் சொன்னீர்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளார். புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் அடுத்த கட்டப் பணிகள் தொடர்பில் ஆராய்வதற்கே கூட்டத்தைக் கூட்டச் சொல்லிக் கேட்டதாக சம்பந்தன் பதிலளித்துள்ளார்.

அதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்ற சூழலில், இந்த விடயம் தொடர்பில் ஏன் அவசரம் காட்டுகின்றீர்கள்? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

'புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் தேர்தலின்போது நீங்கள் வாக்குறுதி வழங்கியிருந்தீர்கள். அந்தப் பணியை முன்னெடுக்க நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. அதனை ஏகமனதாக எல்லோரும் ஆதரித்திருந்தார்கள். வழிநடத்தல் குழு உள்ளிட்ட புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் யாவும் தங்களின் அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்டது. ஒக்ரோபர் 26ஆம் திகதி அரசியல் குழப்பம் காரணமாக புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது. அந்தப் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். புதிய அரசமைப்பு ஊடாகவே நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இந்த விவகாரத்தை தூக்கி வீச முடியாது' என்று சம்பந்தன் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவருக்கும், இரா. சம்பந்தனுக்கும் இடையில் சுமார் 10 நிமிடங்கள் வரையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5.22)

## சிவில்...

யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய சிவில் நிலமை தொடர்பில் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இணுவிலில் கடந்த மாதம் 15ஆம் திகதியன்று இடம்பெற்ற விபத்தில் இரு முச்சக்கர வண்டிகள் மோதிய விபத்தில் ஒரு சிறுவன் உயிரிழந்தான். அந்தக் குடும்பமே படுகாயமடைந்தது. அந்த விபத்தை ஏற்படுத்திய முச்சக்கர வண்டியை செலுத்தியவர் பொலிஸ் உத்தியோகத்தர். ஆனால் அவர் மறுநாளே பிணையில் வெளிவந்தார். இந்த விடயத்தில் பொலிஸார் நேர்மையாகச் செயற்படவில்லை என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா குற்றம் சுமத்தினார். நாம் அறிக்கையில் தெளிவாகச் சுட்டிக்காட்டினோம். இருப்பினும் நீதிமன்றமே பிணை வழங்கியது. எனவே இது தொடர்பில் நாம் கருத்துக்கூற முடியாது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். ஆரியகுளம் நாகவிகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஒலி எழுப்பப்பட்டு நோயாளர்களுக்கு இடையூறு ஏற்படுத்தப்படுகின்றது. எனவே இதனைத் தடுக்க வேண்டும் என மீண்டும் தவராசா கோரினார். இதற்குப் பதிலளித்த பொலிசார் எல்லா ஆலயங்களும் சட்டத்தை மீறுகின்றன. இருப்பினும் இது தொடர்பில் ஏன் மருத்துவமனையின் பணிப்பாளர் முறையிடவில்லை. கோயில்களிலும் அனுமதி இன்றி ஒலிபெருக்கி பாவிக்க அனுமதிக்கின்றோம் எனப் பொலிசாரால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த விடயம் மிகவும் சர்ச்சையாக சென்ற சமயம் குறித்த கூட்டமானது பொலிஸாருக்கு எதிராகக் குற்றம் சுமத்துவதற்கென்றே இடம்பெறும் கூட்டம் போலுள்ளது. இது இவ்வாறே தொடர்ந்தால் நாம் கூட்டத்தில் இருந்து வெளியேறுகின்றோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். மாவட்டச் செயலர் சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்து கூட்டத்தைத் தொடர்ந்தார். (ம-105)

## புதிய...

மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலமை ஏற்பட்டிருந்தது. அடுத்த கட்டப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வேண்டுகோளுக்கு அமைவாக சர்வகட்சிக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. புதிய அரசமைப்பு உருவாக்கத்திலுள்ள நிறைவேற்று அதிகார ஒழிப்பு, தேர்தல் முறைமை, அதிகாரப் பகிர்வு ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டன. இதில் நிறைவேற்று அதிகார முறைமை ஒழிப்பு மற்றும் தேர்தல் முறைமை மாற்றம் ஆகியன தொடர்பில் அனைத்துக் கட்சிகளிடையேயும் இணக்கப்பாடு இல்லை. அதிகாரப் பகிர்வு தொடர்பில் இணக்கப்பாடு காணப்படுகின்றது. இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இன்று ஏற்றுக் கொண்டது. எனவே இணக்கப்பாடுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆராய்வதற்கு 4பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அடுத்த கூட்டத்தில் அந்தக் குழு அறிக்கை சமர்பிக்கும்.

புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஓ,5,22)

## ரவிராஜை...

உத்தியோகத்தர் லியனாராச்சிகே அபயரத்ன கொழும்பு மேல்நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

ரவிராஜ் கொலை வழக்குத் தொடர்பான விசாரணைகள் கொழும்பு மேல்நீதிமன்றத்தால் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரவிராஜ் கொலை அரசின் சூழ்ச்சியால் மேற்கொள்ளப்பட்டது. பணம் பாதுகாப்பு அமைச்சின் வசந்த என்பவரூடாக கருணா தரப்புக்கு வழங்கப்பட்டது. இந்தக் கொலை பிரதிப் பொலிஸ்மா அதிபர் கீர்த்தி கஜாநாயக்க, அரச புலனாய்வுப் பிரிவின் அத்தியட்சகர் டூல் ஆகியோருக்குத் தெரிந்தே மேற்கொள்ளப்பட்டது - என்றார்.

வழக்கின் விசாரணைகள் மார்ச் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. ரவிராஜ் கொலை செய்யப்படுவதை நேரில் பார்த்த சாட்சியான நான்காம் இலக்க சாட்சி, எதிர்வரும் 2ஆம் திகதி சாட்சியம் வழங்கவுள்ளார். (ம)

## சர்வகட்சி...

திசாநாயக்க தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு அமைவாக சர்வகட்சிக் குழுக் கூட்டம் நேற்றுக் கூட்டப்பட்டது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமை தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவரிடம் கேட்டபோது, தமது கட்சி இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தீர்மானம் எடுத்துள்ளது. இதனை மாத்திரமே இப்போது சொல்ல முடியும் என்று பதிலளித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் 20ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5,22)

## உக்கிப்போன...

கட்சிக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வகட்சிக் குழுக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ச பங்கேற்கவில்லை. இது தொடர்பில் அவரிடம்கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, புதிய நாடாளுமன்றமே அரசமைப்புக்கான அடுத்த கட்டத்தைப் பற்றி யோசிக்கவேண்டும். ஆட்டம் காணும் இந்த அரசால் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளை முன்னெடுக்க முடியாது. இதனாலேயே இதில் பங்கேற்கவில்லை - என்றார். (ஓ,5,22)

## மகாஜனக் கல்லூரி



முதல் நிலையில் நிற்போர் (இடமிருந்து வலமாக) : ஏ.சிவகரன், எஸ்.சயந்தன், எஸ். வரயக்சன், எல்.அபூர்வன், ஆர்.தனிஸ்ரன்.
இரண்டாம் நிலையில் நிற்போர் (இடமிருந்து வலமாக): யூ.அனித்டேவிட், எஸ்.சிலக்ஸன், யூ.மதீஸன், ரி.றஜிந்தன், எஸ்.ஜேம்ஸ்சன், ரி.வானுசன், எஸ்.சதுர்ஜன், ஜே.ஐதுர்ஜன்.
இருப்போர்: (இடமிருந்து வலமாக)ரி.பகீரதன் (பொறுப்பாசிரியர்) கே.கோகுலகாந் (கிரிக்கெட் இணைப்பாளர்) கே.மயில்வாகனம் ( விளையாட்டுத்துறைத் தலைவர்) எஸ்.பவன் (பிரதி அதிபர்) எம்.பகீரதன் (தலைவர்), எம்.மணிசேகரம் (அதிபர்) ஆர்.சுஜன் (உபதலைவர்) வி.சந்திரசேகரம் (பிரதி அதிபர்) கே.வசந்தரூபன் (விளையாட்டுத்துறை இணைப்பாளர்), ஆர்.மதுசன் (பயிற்றுநர்)

## ஸ்கந்தவரோதய கல்லூரி



நிற்போர் (இடமிருந்து வலமாக ) பி.அஜிந்தன், டி.அமிர்தசரதன், எஸ்.டனுஸ்ராஜ், ஜி.நிகர்ஜன், கே.டிலக்சன்.
இரண்டாவது நிலையில் (இடமிருந்து வலமாக நிற்போர்: எஸ். ஹரிஹரவதனன், ரி.ஜெசூரன், எஸ்.சோபிதன், எல்.லஸ்சன், ஜே.கலிஸ்ரன், எஸ்.டக்சன், கே.றெக்சன், எஸ்.டான்சன்.
இருப்போர் (இடமிருந்து வலமாக) ஆர்.இராஜகாந்தன் ( விளையாட்டுத்துறைத் தலைவர்), எஸ்.பிரசன் (உபதலைவர்), மு.செல்வஸ்தான்(அதிபர்), வி.உமாசுதன் (பெறுப்பாசிரியரும் கிரிக்கெட் இணைப்பாளரும்) எஸ்.ஜசிதரன் (பயிற்றுநர்)

# வீரர்களின் சமர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
வீரர்களின் சமர் என்று வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான இரு நாள்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
2001ஆம் ஆண்டு இரண்டு பாடசாலைகளுக்கும் இடையிலான வீரர்களின் சமர் ஆரம்பமானது. தெல்லிப்பழை மகாஜன கல்லூரி 5 தடவைகளும், ஸ்கந்தவரோதயா கல்லூரி 4 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. ஏனைய 9 ஆட்டங்களும் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளன.
சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் ஆகியோர் தலைமையில் இடம்பெறும் ஆட்டத்தில், முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் திருமதி மீனா சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினராக பி.முகுந்தனும், மதிப்புறு விருந்தினராக எஸ்.குமரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ.5)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.
இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

✦✦✦✦

கம்பர்மலை கலைவாணி சனசமூக நிலைய வைரவிழாவை முன்னிட்டு அணிக்கு 7பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

✦✦✦✦

கரவெட்டி வாலிபர் வட்டம் விளையாட்டுக்கழகம் சிவராத்திரியை முன்னிட்டு கி.சிவநேசன் நினைவு வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் அணிக்கு 6பேர் பங்குபற்றும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.
இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியுடன் இரவு 9 மணிக்கு ஆவரங்கரல் மத்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி வளர்மதி விளை யாட்டுக்கழ அணி மோதவுள்ளது.
இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியுடன் இரவு 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)

## றேஞ்சர்ஸை வீழ்த்தியது நாவாந்துறை சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 1
நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தியது.
யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியும், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின.
ஆட்டத்தின் முதல் பாதியிலேயே சென்.மேரிஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டம் ஆரம்பமாகி 14ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் பதிவு செய்தார் மதி. இரண்டாவது கோலை 45ஆவது நிமிடத்தில் யூட் பதிவு செய்தார். முதல் பாதி ஆட்டம் முடிவடையும்போது 2:0 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி முன்னிலை பெற்றது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானது சென்.மேரிஸ் அணி தனது கைவரிசையைத் தொடர்ந்தது. 52ஆவது நிமிடத்தில் மூன்றாவது கோலை நிதர்சன் பதிவு செய்ய முன்னிலை பெற்றது சென்.மேரிஸ் அணி.
கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி கோல் அடிப்பதற்கு கடுமையாக முயன்றது. ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்திலேயே அந்த அணிக்கு வாய்ப்புக் கிடைத்தது. அந்த அணி வீரர் ஆர்த்திகன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். ஆட்டநேர நிறைவில் 3:1 என்ற கோல்கணக்கில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளை யாட்டுக்கழ்கம் வெற்றி பெற்றது. (ஒ.23)

## வளர்மதி வி.கவை வீழ்த்தி இந்து இளைஞன் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 1
புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி. அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் திருக்குமரன், லஜிதன் நினைவு வெற்றிக் கிண்ணத் துக்கான மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு 8 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெற்றது.
5 செற்களைக் கொண்டதாக இறுதி ஆட்டம் நடைபெற்றது. முதலிரு செற் ஆட்டத்தையும் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி 25:6, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது. மூன்றாவது செற் ஆட்டத்தில் இரண்டு அணியினரும் அதிரடியாக ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இறுதி வரை பரபரப்பாக ஆட்டம் நகர்ந்தது. இறுதியில் 28:26 என்ற புள்ளிகள் கணக்கில் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. இதனடிப்படையில் 3:0 என்ற செற்கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது. (ஒ.23)



இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி

## கெய்ல் சாதனை

இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற நான்காவது போட்டியில் கிறிஸ் கெய்ல் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 162 ஓட்டங்களைக் குவித்து புதிய சாதனையைப் படைத்தார்.
ஒருநாள் போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த இரண்டாவது மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் என்ற சாதனையை கெய்ல் படைத்தார். லாரா ஒருநாள் போட்டியில் 10 ஆயிரத்து 405 ஓட்டங்கள் எடுத்து முதலிடத்தில் உள்ளார். இதனை கிறிஸ் கெய்ல் உலகக் கிண்ணப் போட்டியோடு முறியடிப்பார் என்று கூறப்படுகின்றது.
இந்தப் போட்டியில் கிறிஸ் கெயல் 14 ஆறு ஓட்டங்கள் அடித்தன் மூலம் பன்னாட்டுப் போட்டிகளில் 506 ஆறு ஓட்டங்களை விளாசியுள்ளார்.




# இங்கிலாந்து ஓட்டங்கள் குவிப்பு போராடித் தோற்றது மே.இ.தீவு

இங்கிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் இங்கிலாந்து அணி 29 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இரு அணிகளுக்குமிடையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இரண்டு போட்டியில் இங்கிலாந்து அணியும், ஒரு போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியும் வெற்றி பெற்றன. ஒரு போட்டி மழை காரணமாக இடம்பெறவில்லை. இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் இங்கிலாந்து அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இங்கிலாந்து அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக பிறிஸ்ரோ, கலிஸ் களமிறங்கினர். இருவரும் சிறப்பான அடித்தளத்தை அணிக்கு இட்டனர். அணி 100 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிறிஸ்ரோ. அதிகபட்சமாக பட்லர் 12 ஆறு ஓட்டங்கள், 13 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 150 ஓட்டங்களைக் குவித்தார். அவரோடு மோர்கன் 103 ஓட்டங்களையும், கலிஸ் 82 ஓட்டங்களையும் பெற்றனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 418 என்ற இமால ஓட்ட எண்ணிக்கையைக் குவித்தது.
பந்து வீச்சில் பிறித்வைட், தோமஸ் தலா இரண்டு இலக்குகளையும், காட்ரல், நுர்சே தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
419 என்ற இமால ஓட்ட எண்ணிக்கையை விரட்டக் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகளின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக கிறிஸ் கெய்ல், காம்ப்பெல் களமிறங்கினர். அணி 50 ஓட்டங்களுக்குள் 2 இலக்குகளை இழந்தது. மூன்றாவது இலக்குக்காக 176 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அதிகபட்சமாக கிறிஸ் கெய்ல் 14 ஆறு ஓட்டங்கள், 11 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 162 ஓட்டங்களைக் குவித்தார். பிராவோ 61 ஓட்டங்களையும், பிறித்வைட் 50 ஓட்டங்களையும், நுர்சே 43 ஓட்டங்களையும் பெற்றனர். 48ஆவது பந்துப்பரிமாற்றத்தில் நான்கு பந்துகளில் நான்கு இலக்குகளைக் கைப்பற்றி இங்கிலாந்தின் வெற்றிக்கு ரசிட் வித்திட்டிருந்தார். அணி 48ஆவது பந்துப்பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 389 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 29 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது.
பந்து வீச்சில் ரசிட் சிறப்பாக பந்து வீசி 5 இலக்குகளையும், வூட் 4 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பட்லர் தெரிவு செய்யப்பட்டார்.

## இங்கிலாந்து உலக சாதனை

இங்கிலாந்து அணி ஒருநாள் போட்டியில் ஒரு இன்னிங்ஸில் 24 ஆறு ஓட்டங்களை அடித்து சாதனை படைத்தது.
இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற நான்காவ்து ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 418 ஓட்டங்களைக் குவித்தது. இந்த இன்னிங்ஸில் இங்கிலாந்து அணியால் 24 ஆறு ஓட்டங்கள் விளாசப்பட்டன. இது பன்னாட்டு கிரிக்கெட்டில் ஒருநாள் போட்டியில் ஒரு இன்னிங் ஸில் எடுக்கப்பட்ட அதிகூடிய ஆறு ஓட்டங்கள் என்ற சாதனையைப் பதிவு செய்தது இங்கிலாந்து அணி. இதற்கு முன்னர் இந்த இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 23 ஆறு ஓட்டங்கள் அடித்ததே சாதனையாக இருந்தது.

## மக்ஸ்வெல்லை கட்டுப்படுத்த முடியவில்லை - கோக்லி

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இறுதி ரி-20 போட்டியிலும் ஆஸ்திரேலியா அணி இந்திய அணியை வீழ்த்தி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது. ஆஸ்திரேலியா அணி எங்களை விட சிறப்பாக விளையாடியிருந்தது என்று அணித் தலைவர் விராட் கோக்லி தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
ஆஸ்திரேலிய அணி எங்களைவிட அனைத்து துறையிலும் சிறப்பாகச் செயற்பட்டது. வெற்றிக்கு அவர்கள் தகுதியான அணி.
இரவு நேரத்தில் பனிப் பொழிவு அதிகமாக இருக்கும் போதும், மக்ஸ்வெல் போன்ற வீரர் அதிரடியாக விளையாடும் போதும் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது- என்றார்.



## ஒருநாள் போட்டியில் புதிய சாதனை

இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் 46 ஆறு ஓட்டங்கள் அடிக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டது. இங்கிலாந்து அணி 24 ஆறு ஓட்டங்களையும், மேற்கிந்தியத்தீவுகள் அணி 22 ஆறு ஓட்டங்களையும் அடித்தது. இது ஒருநாள் போட்டி ஒன்றில் அடிக்கப்பட்ட அதிகபட்ச ஆறு ஓட்டங்கள் என்ற சாதனையைப் பெற்றது.

# முதல் நாளில் பங்களாதேஷ் தடுமாற்றம் நியூசிலாந்து நிதானமான ஆரம்பம்

பங்களாதேஷ் அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்ற ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியிருந்தது. இரு அணிகளுக்குமிடையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இடம்பெற்று வருகின்றது. நேற்று இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து நிதானமான ஆட்டத்தை தொடங்கி யுள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித் தது. பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தமிம் இக்பால், சட்மன் இஸ்லாம் களமிறங்கினர். இருவரும் நிதானமாகத் துடுப்பெடுத் தாட ஆரம்பித்தனர். அணி 57 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சட்மன் இஸ்லாம் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணி 150 ஓட்டங்களுக்குள் 4 இலக்குகளை இழந்து பரிதவித்தது. அதிகபட்சமாக தமிம் இக்பால் 126 ஓட்டங்களையும், லின்ரன் டாஸ் 29 ஓட்டங்களையும், முகமத்துல்லா 22 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். அணி 234 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது.
பந்து வீச்சில் வோக்னர் 5 இலக்குகளையும், சவுத்தி 3 இலக்குகளையும், போல்ட் , ஹன்ஸ்கோம்ப் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ராவல், லாதம் களமிறங்கினர். இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணி நாள் முடிவில் 86 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. ராவல் அரைச் சதம் கடந்து 51 ஓட்டங்களுடனும், லாதம் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத் திலுள்ளனர்.

## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 1
68ஆவது இராணுவப் படைப்பிரிவால் நடத்தப்பட்ட அணிக்கு 11பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது.
வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஓ.23)





## மரண அறிவித்தல்

### சுப்பையா சற்குணம்

(கொக்குவில் மேற்கு ஐயனார் கோயில் தர்மகர்த்தாவும் (ஸ்ரீ சித்திவிநாயகர் ஐயனார் கோயில்) ஓய்வுநிலை உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை மலேரியா பரிசோதனைப்பிரிவு)



கொக்குவில் மேற்கு ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சற்குணம் நேற்று (28.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு புதல்வரும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம், குமாரசாமி, தெய்வேந்திரம், சந்திரமதி மற்றும் பரமேஸ்வரி, கோமதி (உரிமையாளர் - கோமதி விலாஸ் செட்டியார்தெரு, கொழும்பு), யோகேஸ்வரி, சரஸ்வதி (கனடா), மகேந்திரன் (கனடா) ஆகியோரின் அருமை சகோதரரும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் விமலாதேவி, உதயசற்குணம், தெய்வேந்திரம், சரவணபவன், புளோர் ஆகியோரின் மைத்துனரும் கோமதி, கோமகன், தேவசுரேந்திரன், தசானந்தன், தாரணி ஆகியோரின் மாமனாரும் அஜித்தா, மாலினி, மயூரன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரி - கோமதி சுப்பையா
(உரிமையாளர் கோமதி விலாஸ்)

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(CS/23668) (11.17)

021 222 6098, 077 018 3053

## பெயர் மாற்றம்

இல. 127, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, நல்லூரைச் சேர்ந்த
**கருணாகரன்** ஆகிய நான்
எனது பெயரை இன்றிலிருந்து **கருநாதன்**
எனப் பெயர்மாற்றி இனிவரும்
காலங்களில் சகல ஆவணங்களிலும்
இவ்வாறே கையொப்பம் இடுவேன்
என இத்தால் சகலருக்கும்
அறியத்தருகின்றேன்.

**கருநாதன்**

(cs.23651) (13)

## வேலைவாய்ப்பு

யாழ் வடமராட்சி பருத்தித்துறையில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு * ரைப்செற்றிங் * வைண்டிங் வேலை. *வீட்டுவேலை ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
(பெண்பிள்ளைகள் விரும்பத்தக்கது)
தொடர்புகளிற்கு : 077 8329477
021 226 0055


FLC FRENCH LANGUAGE CENTRE



பிரெஞ்ச்

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 05.03.19 செவ் 2.15 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 06.03.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

ஸ்ரீ கொல்லிமலை மாந்தீரக ஜோதிடர் மாந்தீரக சித்தர்

யாழ்ப்பாணம் வருகை



ஜாதகம், கைரேகை, ஆண், பெண் வசியம், தொழில், கலைத் துறையில் சாதிக்க மற்றும் கணவன், மனைவி பிரச்சினைகள், குழந்தை பாக்கியம் எல்லாம்சிறந்த முறையில் செய்து தரப்படும்.

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் வீதி,
(கொழும்பு வோர்க்ஷாப் எதிரில்)
076 495 1787, 077 897 1672

போட்டிப்பரீட்சை கருத்தரங்கு

P.உமாசங்கர்
& வளவாளர்கள்
S.நவநீதன், S.அன்ரன்பெரேரா,
A.பௌநந்தி
SLAS, SLEAS, Registrar
Stalision & Low Entrance
03.03.2019
9.00am → 4.00pm
(தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்)
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள் நவீன மாற்றங்களுடன்

நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்
T.P.- 077 469 6695
077 7417143

போட்டிப் பரீட்சை கருத்தரங்கு
P. உமாசங்கர் & வளவாளர்கள்
வடக்கு மாகாண இறைவரி சேவையின் மாகாணவரி . மதிப்பீட்டாளர்
03.03.2019
9.00am - 4.00 pm
(தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்)
முற்றிலும் எதிர்பார்க்கை வினாத்தாள் மற்றும் மாற்றங்களுடன்.

நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
077 469 6695,
0777 417 143,
071 813 0390

SAMSUNG

Galaxy S10e | S10 | S10+

Pre-order* and get

Galaxy Buds Free



பெற்றுகொள்ளக் கூடிய இடங்கள் : DAMRO | JKOA | SINGHAGIRI | SINGER | softlogic | Dialog | Sri Lanka Telecom Mobitel | daraz | wow.lk

ரூ. 139,990 இலிருந்து.

இப்படத்தில் காண்பிக்கப்படும் பொருளின் விலை எவ்வித முன்னறிவிப்புமின்றி மாறுபடக்கூடும். மேலதிக தகவல்களுக்கு விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனை முகவர்களை தொடர்பு கொள்ளவும். இங்கு காண்பிக்கப்பட்டுள்ள பொருளின் படங்கள், அம்சங்கள் மற்றும் விவரக்குறிப்பீடுகள் ஆகியன கட்புலனுடான தெளிவுப்பாட்டை வழங்கும் நோக்குடனே அமைந்துள்ளன. உண்மையான பொருள் இதிலிருந்து மாறுபடக்கூடும். 2019 மார்ச் 1 தொடக்கம் 12 வரையிலான காலப்பகுதியில் Galaxy S10 மற்றும் S10+ யை வாங்குவதற்காக முன்பதிவு செய்தவர்களுக்கு மாத்திரமே *முன்பதிவு பரிசு அளிக்கப்படும். விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மேலதிக தகவல்களுக்கு www.facebook.com/SamsungLanka/ யை பார்வையிடவும்.

SIMPLY DIAL
011 SAMSUNG
7267864

SamsungLankaOfficial
SamsungLankaOfficial


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.